வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 16.12.2021 வியாழக்கிழமை | இதழ் : 11 | பக்கங்கள் : 16




# தீவக மின் திட்டங்கள் கைவிடப்படவில்லை!

## வடக்கில் சீனாவுக்கு இரகசிய நோக்கங்களும் இல்லை யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

தமிழ் சமூகத்தினருடன் சீனா உறவை வளர்த்துக்கொள்ள விரும்புவதற்குப் பின்னால் எவ்வித இரகசியத் திட்டங்களும் இல்லை. யாழ்ப்பாணத் தீவுகளில் சீன நிறுவனத்தினால் தொடங்கப்படவுள்ள மின் உற்பத்தி திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டதாக வெளிவந்த செய்திகளில் உண்மை எதுவும் இல்லை. 15



## யாழ்ப்பாணத்தின் 3 தீவுகளையும் சீனாவுக்கு வழங்கும் திட்டமில்லை!

### பாதுகாப்பு செயலர் கமல் குணரத்ன

கொழும்பு, டிசெ. 16

“யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளையும் சீனாவுக்கு வழங்கும் எந்த வித நோக்கமும் எமது அரசாங்கத்திடம் இல்லை. ஆனால், முதலீடுகளின் போது சர்வதேச நாடுகளை தெரிவு செய்யும் வேளையில் தெரிவாவது சீன நிறுவனம் என்றால் 15

### ஈ. பி. டி. பியின் ஆதரவுடன்

## யாழ். மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வசமுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று புதன் கிழமை மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங் 15

### ஜனாதிபதி ஆணைக்குழு மனோ எம்.பிக்கு

## தனி சிங்களத்தில் அழைப்பாணை தமிழில் தருமாறு மீள அனுப்பினார்!

கொழும்பு, டிசெ. 16

கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு குழு மற்றும் செயலகத்தின் செயல்பாடுகள் தொடர்பில் விசாரிப்பதற்காக தற்போதைய ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தமது இல்லத்துக்கு, கொஹுவளை வலய பொலிஸ் நிலையம் ஊடாக கையளிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை தனியே சிங்கள மொழியில் மாத் 15

## 16 பேர் தொற்றால் பலி!

கொழும்பு, டிசெ. 16

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 16 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 தொடக்கம் 59 வயது பிரிவினரில் 15

## யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழல் கோட்டையாகி விட்டது

### கஜேந்திரகுமார் எம். பி.

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழலுக்கான கோட்டையாக மாறியுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபின் 15

## வடமராட்சியில் நேற்றும் மனித எச்சங்கள் ஒதுங்கின?



வடமராட்சி, டிசெ. 16

வடமராட்சி - தொண்டைமானாறு - கெருடாவில் மேற்கு - சின்னமலை கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் மனித எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் எலும்புகள் சில மீட்கப்பட்டுள்ளன. 15

## திருமணத்துக்கு மறுப்பு யுவதி சுட்டுக்கொலை!

### நெடுங்கேணியில் கொடூரம்

நெடுங்கேணி, டிசெ. 16

தன்னை திருமணம் செய்யுமாறு விடுத்த வற்புறுத்தலை நிராகரித்தமைக்காக இளம் பெண் சுட்டுக் கொல்லப்பட்டார். வேட்டைக்கு பயன்படுத் 15

## அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்!

### அமெரிக்க இராஜாங்க செயலர்

வாஷிங்டன், டிசெ. 16

அரசியல் கைதிகள் என்ற ரீதியில் கைதுசெய்து தடுத்து வைக்கப்படுபவர்கள் சில சந்தர்ப்பங் 15



## யாழ். வந்த சீன தூதுவருக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 16

இரு நாள் சுற்றுப்பயணமாக நேற்று வடக்குக்கு வந்த சீனத் தூதுவர் கீ சங் ஹொங்குக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை வவுனியா வந்த தூதுவர் வன்னி 15



# இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு பலசரக்குக் கடை.

கடையில் பல இடங்களிலும் விளம்பரம் செய்வதுபோல அழகாக வடிவமைக்கப்பட்ட அறிவித்தல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

“நாங்கள் விற்ற எந்தப் பொருளும் சரியில்லை என்றால் எங்களிடம் திருப்பித் தந்து விடலாம். அதற்குப் பதிலாக அதே தரமுள்ள பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.”

இதுதான் அந்த விளம்பரத்தில் காணப்பட்ட வரிகள்.

கொழும்பில் நடந்து முடிந்த தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஐயா ஒரு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்தக் கூட்டத்தைப்பற்றி ஊடகங்கள் அறிக்கையிட்டது ஐயாவை கோபப்படுத்தியிருக்க வேண்டும்.

ஒரு சில கட்சிகளை ஒதுக்கிவைத்துவிட்டு தமிழ் பேசும் கட்சிகளின் ‘ஒருமித்த தீர்மானம்’ என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை நிறுத்த வேண்டும் என்பது அவரின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

உண்மைதான், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி அவரின் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டிருந்தது. அதாவது அவர் தலைமையை ஏற்று சுரேஷ் அந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். அவருக்குக் கூட்டத்திற்கு அழைப்பு இல்லை. ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ். அழைக்கப்பட்டிருந்தது.

அதுபோலவே, முஸ்லிம் மக்களில் கணிசமான ஆதரவைப் பெற்ற ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸூக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தது. ஆனால், இரண்டு முஸ்லிம் கட்சிகளுக்குமே பாராளுமன்றத்தில் சமமான பலமே இருக்கின்றபோதிலும் ரிஷாத் கட்சி மாத்திரமே வடக்கில் குறிப்பாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் கணிசமான ஆதரவைப் பெற்ற கட்சி.

கூட்டத்தை ஏற்பாடு செய்த ரெலோவின் பலமும் வன்னியில்தான் அதிகம் என்பதும் கவனிக்கத்தக்கது.

தமக்குப் போட்டியாக இருக்கின்ற முஸ்லிம் கட்சியை வேண்டுமென்றே தவிர்த்தார்களா என்பதும் தெரியவில்லை.

அதுவல்ல இன்று முக்கியமாக சொல்ல வருவது. சங்கரி ஐயா கூறியிருப்பது இந்த பார்வையில் பார்த்ததால் சரியானது தான். ஆனால் அவரே, அவரை அழைக்கவேண்டியதில்லை என்பதையும் தனது அறிக்கையிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஒரு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் இந்த முடிவு தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதைக் குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதை நினைக்கும்போது தனக்கு வேதனையைத் தருகின்றது என்றும் சங்கரி ஐயா கவலைப் படுகின்றார்.

அந்நிய நாடுகளின் அழுத்தத்தைப் பிரயோகிக்கக் கோருவது முட்டாள்தனமானது என்று கூறும் சங்கரி ஐயா, இது உள்ளூர் அரசியல்வாதிகளையும் குறிப்பாக பெரும்பான்மையின கடும்போக்காளர்களையும் கோபமடையச் செய்யுமாம்.

அவர் நீண்டகாலமாகவே இந்திய முறையிலான தீர்வு ஒன்றே இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு என்று தொடர்ச்சியாகக் கூறிவருபவர். பதின்மூன்று அறிமுகம் செய்யப்பட்ட போது, இந்தியத் தரப்பில் இதுவும் இந்தியாவில் இருப்பது போன்றதுதான். இந்திய மாநிலம் ஒன்றுக்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களும் எமது மாகாண சபைகளுக்கும் இருக்கின்றது என்றே கூறப்பட்டது.

பிற்காலத்திலேயே பிரேமதாஸ ஆளுநருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் திருத்தங்களைச் செய்து மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் கைங்கரியத்தை தொடக்கி வைத்தார்.

சங்கரி ஐயா கேட்கும் இந்திய முறையிலான தீர்வு ஏற்கனவே எமது அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கின்றது. அதனை முழுமையாக அமுல்படுத்த இந்தியா அழுத்தம் கொடுப்பதை கண்டிக்கும் அவர், அதற்காக இலங்கைத் தலைவர்களுடனேயே பேசவேண்டும் என்கிறார்.

நல்ல யோசனைதான், ஆகக் குறைந்தது அவரின் கருத்தை ஏற்றுக்கொள்ளும் கட்சிகளையாவது அவர் ஒன்றிணைத்து அரசிடம் கேட்டுப்பெற முயற்சிக்க வேண்டும். அதைவிடுத்து சம்பந்தன் ஐயா, இந்திய விஜயத்தை தவிர்க்க சொன்ன காரணங்களைப் போல இவரும் நொண்டிக் காரணங்களை சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

அவ்வாறு செய்யாதவரை அந்த கடையில் இருந்த விளம்பரப் பலகையைப் போலத்தான் ஐயாவின் அறிக்கையும் இடம்பெற்றுவிடும்.

**- ஊர்க்குருவி**

## சிவசக்தி ஆனந்தனின் செயலரிடம் விசாரணை

வவுனியா, டிசெ. 16

முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளரான கனகலிங்கம் சிறிமதன் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

வவுனியா - புதியிருப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் வழிமறித்தே இந்த விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் எம். பியின் அலுவலகத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தபோது சிவில் உடையில் வழிமறித்த நால்வர், தம்மை பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் என்று அடையாளம் காட்டி சுமார் அரை மணி நேரம் விசாரணைகளை நடத்தினர் என்று கூறப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டமை குறித்தும், அதனை ஏற்பாடு செய்தவர்கள் தொடர்பிலும், சிவசக்தி ஆனந்தனின் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் தன்னிடம் விசாரிக்கப்பட்டன என அவர் கூறினார். (ஐ-2)

## துப்பாக்கி ரவைகள் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சிக்கு கோரக்கன் கட்டுப்பகுதியில் தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தக் காணியில் குழி ஒன்றை வெட்டும்போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டன. இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் நேற்று அங்கு முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் இரு பெட்டி ரவைகள் மீட்கப்பட்டன. (ஐ)

## மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

மன்னார், டிசெ. 16

மன்னார் - பரப்புக்கடந்தான் கிழக்கு பகுதியில் உள்ள தோட்ட காணி ஒன்றில் இறந்த நிலையில் காட்டு யானை ஒன்று நேற்றுக் காலை கிராம மக்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தனர். இதையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த யானையின் உடலை மீட்டனர்.

இறந்த யானை 35 வயதுடைய பெண் யானை என்று தெரியவந்துள்ளது. யானையின் உடல் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை தெரிய வந்தது.

சட்டவிரோதமாக மின்சார இணைப்பு வைக்கப்பட்டமையே இதற்கு காரணம் என்று அறியப்பட்ட நிலையில் மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

கல்வி tv CHANNEL-1

### 16.12.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

### 16.12.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
16.12.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

# அதிகாரப் பகிர்வுக்கு எதிரான சிங்கள மனநிலை

ஒருபுறம் - அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடாக, அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டிருக்கும், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று, பெரும்பான்மையான தமிழ் பேசும் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. மறுபுறம், அதிகாரப்பகிர்வை வழங்கினால், நாடு பிரிவினையை நோக்கி பயணிக்கும் என்று சிங்கள - பௌத்த தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், நியமிக்கப்பட்டிருக்கும் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ செயலணியின் தலைவர் ஞானசார தேரர் - அதிகாரப் பகிர்வை வழங்கினால் நாடு பிரிவினையை நோக்கிச் செல்லும் - 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் - 13இற்கு அப்பால் செல்லுங்கள் என்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்படக் கூடாது - என்று கூறியிருக்கின்றார். அவ்வாறாயின், இந்த செயலணியின் பரிந்துரையின் அடிப்படையிலான புதிய அரசியல் யாப்பு எப்படியானதாக இருக்கப்போகின்றது?

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று கோருவதற்கு, தமிழ் பேசும் கட்சிகளுக்கு முழுமையான உரிமையுண்டு - அந்த உரிமை சிங்கள தரப்புக்களுக்குமுண்டு. ஏனெனில், அது இந்த நாட்டின் அரசியல் யாப்பு. அரசியல் யாப்பை முறையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறுவது ஓர் அடிப்படை உரிமையாகும். அரசாங்கம் உள்ளக பொறிமுறை தொடர்பில் பேசிவருகின்ற நிலையில், முதலில் அரசியல் யாப்பில் இருப்பதை அமுல்படுத்திக் காட்டுங்கள் என்று கோருவதில் எந்தவொரு தவறும் இல்லை. ஆனால், இருப்பதையும் எவ்வாறு கபளீகரம் செய்யலாம் என்பதைப் பற்றியே சிங்கள - பௌத்தவாதிகள் சிந்திக்கின்றனர். ஞானசார தேரரின் கருத்து, ‘ஒரு பானை சோற்றுக்கு - ஒரு சோறு பதம்’ என்பதாகவே இருக்கின்றது. இருப்பதையும் இல்லாமலாக்கும் நோக்குடன்தான், ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ - என்னும் அரசியல் சுலோகம் உயர்த்திப் பிடிக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் சிங்கள - பௌத்தவாதிகளின் திட்டங்களை தெளிவாக புரிந்துகொண்டே, தமிழ் தேசிய தரப்புக்கள் செயலாற்ற வேண்டும். இல்லாவிட்டால், தமிழர் செயல்பாடுகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகலாம்.

விடுதலைப் புலிகள் மிகவும் பலமாக இருந்த நிலையில்கூட, இடைக்கால தீர்வு ஒன்றை முன்வைத்திருந்தனர். அதுதான் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை. ஏன் அந்த இடைக்கால அதிகார சபைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது? ஏனெனில், ஒரு நிரந்தர தீர்வை நோக்கி பயணிக்கும்போது, அதற்கான புறச் சூழலை ஏற்படுத்துவதும், அதனை பேணிப் பாதுகாப்பதும், இரு தரப்பின்மீதான நம்பிக்கையை மக்கள்மீது கட்டியெழுப்ப வேண்டியதும் அடிப்படையான விடயங்களாகும். இல்லாவிட்டால், ஒரு நிரந்தர தீர்வை நோக்கி பயணிக்க முடியாது. ஆனால், அவ்வாறானதோர் இடைக்கால கோரிக்கையை முன்வைத்தபோது, விடுதலைப் புலிகள் இராணுவ வலுச் சமநிலையை ஏற்படுத்தியிருந்தனர். தங்களை தவிர்த்து இலங்கைத் தீவில் எதனையும் செய்ய முடியாதென்பதை நடைமுறையில் நிரூபித்திருந்தனர்.

இவ்வாறானதொரு சூழலில்தான் பேச்சுக்கள் ஆரம்பித்திருந்தன. ஆனால், இன்றோ நிலைமைகள் தலைகீழ் நிலைக்கு சென்றிருக்கின்றன. அன்றிருந்த நிலைமைக்கும் இன்றைய சூழலுக்கும் உள்ள வேறுபாடானது - மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாகும். ஏனெனில், சம்பந்தன் சந்திப்பதற்கு நேரத்தை தருமாறு கேட்டும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதுவரையில் அதற்கு பதிலளிக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில் தமிழர் தரப்புக்கள் எவ்வாறான உத்திகளை கையிலெடுக்க வேண்டும்? இந்த இடத்தில் வெளியாரின் அழுத்தங்கள் மட்டும்தான் தமிழர்களுக்கு ஆறுதலளிக்கின்றன.

ஆனால், அங்கும் ஒரு சிக்கல் இருக்கின்றது. பிராந்திய சக்தியான இந்தியாவின் - ஈழத் தமிழர் தொடர்பான கொள்கை நிலைப்பாடு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. அதில் மாற்றம் ஏற்படும் வரையில் தமிழர்கள் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இடைக்கால கட்டமைப்பு ஒன்றை கோருவதற்கு தமிழர்களிடம் பலம் இல்லை - அதேவேளை, இருப்பதையும் பிடுங்கியெடுக்கும் நோக்கில் அரசாங்கம் செயல்படுகின்றது - இவ்வாறானதொரு சூழலில், தமிழர் தலைமைகள் என்ன செய்ய முடியும்? எதைச் செய்தால் அது தமிழ் மக்களின் இருப்பை ஓரளவாவது பாதுகாக்கப் பயன்படும்? இந்த அடிப்படையில்தான் சமகால அரசியல் முன்னெடுப்புக்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்றும் ஆணைக்குழுக்கள்!

**-அலசுவது இராஜதந்திரி-**

*இலங்கையில் ஏதாவது பாரிய அனர்த்தம் ஏற்பட்டுவிட்டால் ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஆனால், இதுவரை இலங்கையில் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகள் தகுந்த பலன்களை தந்திருக்கவில்லை. அத்துடன், அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் தாம் கையாண்ட விவகாரங்கள் தொடர்பாக வெளியிட்ட சிபாரிசுகள்கூட உரிய வகையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*அமெரிக்காவின் கீர்த்திமிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் ஒரு தடவை ‘சிலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது’ என்று கூறியிருந்தார்.*

*இந்நிலையில், தற்போது சில தினங்களாக “திணிக்காதே, திணிக்காதே, ஆணைக்குழுக்களை திணிக்காதே, போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம், எமக்கு வேண்டும் சர்வதேச விசாரணையே” என்று வலிந்து காணாமல் போனோரின் உறவுகள் கிளிநொச்சியிலும் பின்னர் நேற்று முன்தினம் வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் மீளவும் தம்மிடம் வேண்டும் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர்.*

*1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து ஆராய்வதற்கென ஆணைக்குழுக்களை நாடளாவிய ரீதியல் சகல மாகாணங்களுக்குமென அமைத்திருந்தார். ஏனெனில், வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல. தென்னிலங்கையில் எண்பதுகளிலும் பின்னர் தொண்ணூறுகளிலும் இடம்பெற்ற ரோஹண விஜயவீர தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் மேற்கொண்ட கிளர்ச்சி நடவடிக்கைகளின்போதுகூட ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.*

*இதன்காரணமாகவே வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக மட்டுமல்ல. நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழுக்கள் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் ஏற்படுத்தப்பட்டிருந்தன.*

*இந்த ஆணைக்குழுக்கள் குறித்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடமிருந்து நிறையவே எதிர்பார்ப்புகள் நிலவியிருந்தன. ஆனால், அந்த எதிர்பார்ப்புகள் அனைத்தையும் மழுங்கடிப்பதாகவே காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.*

*இந்நிலையில், தம்மை தொடர்ந்து ஆணைக்குழு விசாரணைகள் என்று தெரிவித்து ஏமாற்ற வேண்டாமென்றே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியிலும் பின்னர் வவுனியாவிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். அத்துடன், இலங்கையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர்கள் கோஷமிட்டனர். அத்தோடு தமக்கு சர்வதேச மட்டத்திலான விசாரணையே தேவை எனவும் வலியுறுத்தியி ருந்தனர்.*

*காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழுக்கள், தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றபோது வன்னியில் ஆயுதப் படையினரிடம் சரணடைந்தோரில் நூற்றுக்கணக்கானவர்களின் நிலைகூட இன்றுவரை தெரியாதுள்ளது.*

*ஏற்கனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து அவர்கள் ஏங்கியிருந்த தருணத்தில் வன்னியில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே இருந்தது.*

*இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழு விசாரணைகளில் நம்பிக்கை இழந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தற்போது தமக்கு சர்வதேச ரீதியிலான விசாரணையே தேவை எனக் கூறிவருகின்றனர்.*

*சர்வதேச விசாரணையை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரலாம். ஆனால், சர்வதேச ரீதியிலான விசாரணைகள் கூட எவ்வளவு தூரம் நம்பகத்தன்மை வாயந்ததாக இருக்குமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.*


*ஏனெனில், இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த காலம் முதல் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் விசாரணைகளின்றி தடுத்து வைத்திருப்போர் என்பது பற்றி சர்வதேச சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகள் நன்கறிந்தே வைத்துள்ளனர்.*

*இதுதவிர, ஆண்டு தோறும் ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் கூட கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்னைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டே வருகின்றது. இருந்தபோதிலும் எவ்வித ஆக்கபூர்வமான தலையீடுகள் வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்னைகள் சம்பந்தமாக சர்வதேச சமூகத்திடமிருந்து ஏற்பட்டிருக்கவில்லை.*

*எனவே, ‘மின்னுவதெல்லம் பொன்னல்ல’ என்பதற்கமைவாக சர்வதேச சமூகம் குறித்தும் அதீத நம்பிக்கை கொள்வதிலும் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்றே கருத முடியும்.*

*வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இலங்கையில் தமது கையாலாகத்தனத்தை மூடிமறைக்க அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தையே சர்வதேச சமூகம் என்பதாகும். இந்த வார்த்தை பிரயோகத்திற்கு பாதிக்கப்பட்டோரும் தம்மை இழந்து விடாதிருப்பதே அவசியமானதாகின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 16 வியாழக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 01
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : திரயோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பயணத்தால் நன்மை உண்டாகும். கவலையும், பயமும் தீரும். சேமிப்பை விரிவுபடுத்தி மகிழ்வீர்கள். பணியாளர்கள் பாராட்டு பெறுவர். தகுந்த காரணத்தால் உங்களது விருப்பத்தை ஒத்திப்போடுவீர்கள்.

**இடபம்**
நன்மை நடைபெறும் நாள். உங்களின் புகழ் அதிகரிக்கும். உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். தந்தையின் ஆரோக்கியம் சீராகும். மனநிம்மதி கூடும்.

**மிதுனம்**
உங்களின் மனவலிமை அதிகரிக்கும். நிம்மதி வரும். பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். எதிலும் பொறுமையுடன் செயல்படுவீர்கள். கலகலப்பான நாள்.

**கடகம்**
பெரிய முதலீடுகளை செய்யும்போது கவனம் தேவை. யோகமான நாள். எதிரியின் பலம் அனைத்தும் குறையும். பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**
சாதகமான நாள். புதிய வேலை வாய்ப்புக் கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் ஆதாயம் உண்டு. அரசியல் துறையினருக்கு முன்னேற்றம் உண்டாகும்.

**கன்னி**
உங்களை நம்பியவர்களை சிக்கலில் மாட்டிவிட வேண்டாம். பிரச்னைகளிலும் மாட்டிக் கொள்ளாதபடி அமைதியாக இருங்கள். எதிலும் எச்சரிக்கை. மனநிறைவு ஏற்படும்படி செயல்படுவீர்கள்.

**துலாம்**
நீங்கள் திட்டமிட்ட விஷயங்கள் பிரமாதமாக நிறைவேறும். இடமாற்றம் உறுதியாகும். முயற்சியில் இருந்த தடைகள் நீங்கும். உங்களது சாதனைகளுக்கு குறுக்கே நின்ற விஷயங்கள் அகலும்.

**விருட்சிகம்**
நினைத்தது நிறைவேற சற்றுப் பொறுமையாக இருக்கவும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை முடித்து நிம்மதி காண்பீர்கள். உங்களது தனித்திறன் பலராலும் பாராட்டப்படும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
சந்தோஷ அலைச்சல் ஏற்படலாம். பேச்சில் கவனமாக இருங்கள். மனைவி, குழந்தைகளுடன் மகிழ்ச்சிப்பயணம் இன்று உண்டு. கவலைகள் தீரும். பணியில் கவனம் செலுத்துவீர்கள்.

**மகரம்**
புத்தி சாதுர்யத்துடன் செயல்பட்டு வெற்றியைத் தேடிக் கொள்வீர்கள். எதையும் சமாளிக்கும் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். சற்றே தாமதமானாலும் வருமானத்திற்கு குறைவில்லை.

**கும்பம்**
சேமிப்பில் மிகுந்த ஆர்வம் கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் உறுதியாகும். வேலைப்பளு கூடும். உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருங்கள்.

**மீனம்**
உடற்பயிற்சியின் மூலம் ஆரோக்கியத்தை காத்துக் கொள்ளுங்கள். பண விஷயத்தில் அலட்சியம் காட்ட வேண்டாம். தாயின் அன்பை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். சந்தோஷமான நாள். விருந்து உண்பீர்கள்.

# அவதூறு குற்றத்துக்காக அண்ணாமலை மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

### வலியுறுத்துகின்றார் திராவிடர் கழக தலைவர் வீரமணி

சென்னை, டிசெ. 16

முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் ஹெலிகொப்டர் விபத்தில் மரணம் அடைந்தது தொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்த கருத்துக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவித்துள்ளார்.

டிசெம்பர் 13 இல் தமிழக பா.ஜ.கவின் அதிகாரபூர்வ ருவிட்டர் பக்கத்தில், "ஜெனரல் பிபின் ராவத் இறந்தது சரிதான் என்று திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அதிகாரபூர்வ துணை அமைப்புகள் கொண்டாடி இருக்கிறார்கள். ஆனால், அவர்களை எல்லாம் விட்டுவிட்டு, கருத்துச் சுதந்திரத்தை கருவோடு அழிக்க நினைக்கிறது தி.மு.க அரசு. - அண்ணாமலை" என்ற கருத்து வெளியிடப்பட்டிருந்தது.

இதை ஒட்டி நேற்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ருவிட்டரில் - கட்சியின் அதிகாரப்பூர்வமான முறையில் திராவிடர் கழகம் பற்றி பொய்யான தகவலைப் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் முப்படைத் தளபதி ராவத் உள்ளிட்ட 13 பேர் விபத்தில் மரணித்தது குறித்து. திராவிடர் கழகத்தின் சார்பில் இரங்கலையும், வீர வணக்கத்தையும் 'விடுதலை' நாளேட்டில் வெளியிட்டுள்ளோம்.

உண்மை இவ்வாறு இருக்க, 'திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அதிகாரபூர்வமான துணை அமைப்புகள் ஜெனரல் பிபின் ராவத் இறந்தது சரிதான் என்று கொண்டாடி இருப்பதாக' தமிழ்நாடு பா.ஜ.கவின் தலைவர் அண்ணாமலை ருவிட்டரில் பதிவு செய்துள்ளார்.



அவதூறு பரப்பியுள்ள தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை மீது சட்டப் படியான உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசையும், குறிப்பாகக் காவல் துறையையும் கேட்டுக்கொள்கிறோம்" என்று கூறியுள்ளார் வீரமணி.

# தி.மு.க. அரசின் சலசலப்புகளுக்கு எல்லாம் அஞ்சிவிட மாட்டோம்

### ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். கூட்டாக அறிக்கை

சென்னை, டிசெ. 16

தி.மு.க. அரசின் சலசலப்புகளுக்கு எல்லாம் அஞ்சிவிட மாட்டோம் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமியும் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "தற்சமயம் அ.தி.மு.கவின் உட்கட்சித் தேர்தல் மகிழ்ச்சியோடும், எழுச்சியோடும், உற்சாகத்தோடும் பெருந்திரளான தொண்டர்கள் ஆர்வத்தோடும் கலந்து கொண்டு 35 கழக மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தோதலையொட்டி, உளவுத் துறையின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், அ.தி.மு.க. முன்பைக் காட்டிலும் கூடுதலாக மெருகேற்றிக் கொண்டு, வீறுகொண்டு எழுகிறது என்ற செய்தியை தாங்கிக் கொள்ள முடியாத, பொறுத்துக் கொள்ள முடியாத தி.மு.க. அரசு, அரசியல் வன்மத்தையும், தனிப்பட்ட காழ்ப்பு ணார்ச்சியின் காரணமாகவும், லஞ்ச ஒழிப்புத் துறையை





தன்னுடைய ஏவல் துறையாக மாற்றி, முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி இல்லத்திலும், அவருடைய நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் சோதனை என்கின்ற பெயரில் மிகப் பெரிய வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இதை நாங்கள் அடிப்படையிலேயே வன்மை யாகக் கண்டிக்கின்றோம்.

எம்.ஆர். விஜயபாஸ்கர், எஸ்.பி. வேலுமணி, கே.சி. வீரமணி, டாக்டர் சி.விஜயபாஸ்கர் போன்ற முன்னாள் அமைச்சர்களின் இல்லங்களிலும், அவர்களுக்கு நெருக்கமானவர்களின் இல்லங்களிலும் அதே போல், சேலம் புறநகர் மாவட்ட புரட்சித் தலைவி பேரவைச் செயலாளரும், தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவருமான இளங்கோவன் இல்லத்திலும் நடைபெற்ற சோதனைகளைத் தொடர்ந்து, அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகத் தற்போது தங்கமணி இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய சோதனையானது அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

தி.மு.க. அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையை. அண்ணா காலத்தில் இருந்து அரசியல் களமாடிக் கொண்டிருக்கக்கூடிய எத்தனையோ முதுபெரும் தலைவர்கள் தி.மு.கவில் உள்ளபோது, தன்னுடைய குடும்பம் மட்டும்தான் ஆள வேண்டும் வாழவேண்டும் என்று அரசியல் செய்து கொண்டிருக்கக்கூடிய தி.மு.கவில் தற்போது ஒரு மிகப்பெரிய சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நாம் அஞ்சப்போவதில்லை" என்று தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் அமைச்சர் தங்கமணியின் இல்லத்தில் நேற்று அதிரடி சோதனை

சென்னை, டிசெ. 16

அ.தி.மு.க. ஆட்சியில் மின்சாரத்துறை அமைச்சராக செயல்பட்ட தங்கமணி வீடு, அவருக்கு சொந்தமான இடங்களில் நேற்று அதிகாலை முதல் லஞ்ச ஒழிப்புத்துறையினர் அதிரடி சோதனை நடத்தியுள்ளனர். மொத்தம் 69 இடங்களில் இவ்வாறு சோதனை நடைபெற்றது.

தங்கமணி மீது வருமானத்திற்கு அதிமான சொத்து சேர்த்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இந்த சோதனை நடைபெற்றதாக லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் 14 இடங்களிலும், நாமக்கல் உள்பட 9 மாவட்டங்களிலும், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலும் முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு தொடர்புடைய மொத்தம் 69 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது. இந்நிலையில், முன்னாள் அமைச்சர் தங்கமணி, மகன் தரணிதரன், மனைவி சாந்தி மீது நாமக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பொலிஸார் ஊழல் வழக்குப்பதிவு செய்துள்ளனர். பிட்கொயினில் தங்கமணி, அவரது மகன் பெருமளவில் முதலீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஒமைக்ரோன் இங்கு பரவாதென உத்தரவாதம் வழங்க முடியாது!

## தடுப்பூசி கட்டாயம் என்கிறார் ஹேமந்த ஹேரத்



கொழும்பு, டிசெ. 16

'ஒமைக்ரோன்' வைரஸ் இலங்கையில் பரவாது என்ற உத்தரவாதத்தை எம்மால் வழங்க முடியாது. எனவே, அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஒமைக்ரோன் புறழ்வு உலகெங்கிலும் வேகமாக பரவிவருகின்றது. குறித்த வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், அவ்வைரஸ் இலங்கையில் பரவாது என்ற நூறு வீத உத்தரவாதத்தை எம்மால் வழங்கமுடியாது.

எனவே, அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அதிலிருந்து தமது உயிரை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனில் மூன்றாவது தடுப்பூசியை பெறவேண்டியது கட்டாயம். அவ்வாறு பெறுவதன்மூலம் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்த முடியும் என்பதுடன், சமூகத்தில் பரவுக் விகிதத்தையும் குறைத்துக்கொள்ளலாம். ஏனெனில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருந்தால், வெளியேறும் வைரஸ் அளவு குறைவாகவே இருக்கும்-என்றார். (அ)

## திருமலையில் ரயிலுடன் மோதி ஒருவர் மரணம்!

திருமலை, டிசெ. 16

திருகோணமலையில் உள்ள தொழிற்சாலையில் இருந்து சீதுவ நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சீனக்குடா - கொட்பே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## யாழில் தொற்றால் உயிரிழப்போரின் சடலத்தை ஓட்டமாவடிக்கு எடுத்துச்செல்ல 85 ஆயிரம் ரூபா!

கொழும்பு, டிசெ. 16

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் யாழ்பாணத்திலிருந்து மட்டக்களப்பு - ஓட்டமாவடிக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்வதற்காக இறந்தவர்களின் உறவினர்களிடம் 85,000 ரூபா வசூலிக்கப்படுவதாக ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு பெரும் சுமையாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய வடக்கில் உரிய காணியை அரசாங்கம் அடையாளம் காண வேண்டும். இல்லையேல் சடலங்களை அரச செலவில் எடுத்துச் சென்று அடக்கம் செய்ய நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தினார். (அ)



## நெடுஞ்சாலையில் கோர விபத்து; 4 வயது மகளும் தந்தையும் பலி!

கொழும்பு, டிசெ. 16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காரில் பயணித்த 4 வயது மகளும் தந்தையும் பலியாகினர். மேலும் மூவர் காயமடைந்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மில்லனிய பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

விபத்துக்குள்ளான காரில் பயணித்த தந்தையும் (வயது-39) மகளுமே (வயது-4) இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கப்பலிலிருந்து எரிவாயுவை தரையிறக்க அனுமதியில்லை

### லிட்ரோ நிறுவனத்துக்கு அறிவிப்பு

தரம் தொடர்பான சிக்கல் காரணமாக லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு கொழும்பு கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பலில் இருந்து எரிவாயுவை தரையிறக்கவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தினால் கொண்டுவரப்பட்ட எரிவாயுவை கப்பலிலிருந்து தரையிறக்கவேண்டாமென லிட்ரோ நிறுவனத்துக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. கப்பலில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள குறித்த எரிவாயுவின் மாதிரியை சோதனைக்கு உட்படுத்தியபோது, அது இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் தரநிலையுடன் பொருத்தமற்றது என உறுதிப்படுத்தப்பட்டதால் நுகர்வோர் விவகார அதிகார சபை இந்த அறிப்பை விடுத்துள்ளது. கடந்த சனிக்கிழமையன்று குறித்த கப்பலில் 3, 700 மெற்றிக் தொன் எரிவாயுவை லிட்ரோ நிறுவனம் இலங்கைக்கு கொண்டுவந்திருந்தது.

அதில் எடுத்து வரப்பட்டிருந்த எரிவாயுவை பரிசோதித்ததில் தரம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டதை அடுத்து குறித்த கப்பல் இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறிலங்கன் விமான நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி இராஜினாமா

கொழும்பு, டிசெ. 16

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விபுல குணதிலக்க தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

சிறிலங்கன் எயார் லைன்ஸில் பணிபுரியும் விமானிகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட சம்பளம் குறைக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்ததையடுத்து, பிரதம நிறைவேற்று அதிகாரி விபுல இந்த தீர்மானத்தை எடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக மீளவும் செல்வேந்திரா

யாழ்ப்பாணம், டிசெ. 16

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா மீண்டும் தெரிவாகினார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரான, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா கோவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கடந்த செப்ரெம்பரில் புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது.

அதில் சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா தலைவராக தெரிவு செய்யப்பட்டார். எனினும் அவர் கடந்த மாதம் சமர்ப்பித்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 2 தடவைகள் தோற்கடிக்கப்பட்டதால் பதவியிழந்தார்.

இந்த நிலையில் மீளவும் நேற்று தவிசாளர் தெரிவு நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 4 உறுப்பினர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி என்பன தலா 2 உறுப்பினர்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.



நேற்றைய தெரிவில் 13 உறுப்பினர்கள் பங்கேற்றனர். அவர்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச் செய்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை. வாக்கெடுப்பில் சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா மீண்டும் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (அ-02)




## சீனத் தூதுவர் குழு நேற்று பருத்தித்துறைக்கு பயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 16
இலங்கைக்கான சீனத் தூதுவர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.
அவர்கள் பருத்தித்துறை முனைப் பகுதியைப் பார்வையிட்டனர்.
சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையில் சீன அதிகாரிகள் இரண்டு நாள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-02-03)

# யாழ்.பல்கலைக்கு அருகே நேற்று பகல் வாள்வெட்டு!

## இளைஞர் ஒருவர் படுகாயம்

**யாழ்ப்பாணம், டிசெ. 16**
**திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திப் பகுதியில் இளைஞன் ஒருவரை கும்பல் ஒன்று துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளது.**



சன நடமாட்டம் அதிகமாக காணப்படும் அந்த பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.
யாழ். நகரப் பகுதியை நோக்கி குறித்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்த நால்வர் இளைஞனை பரமேஸ்வரா சந்தியில் வழிமறித்து வாள் வெட்டை மேற்கொண்டனர்.
கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பித்து, பல்கலைக் கழகம் பக்கமாக இளைஞன் தப்பியோடியபோதும் அவர் துரத்தி துரத்தி வாளால் வெட்டப்பட்டார்.
வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.
யாழ்.பல்கலைகழகத்துக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றமை மாணவர்கள் மத்தியில் பெரும் அச்ச நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# எதிர்க்கட்சி எம்.பிக்களின் தொலைபேசி ஊடுருவலா?

கொழும்பு, டிசெ. 16
நீதிமன்ற உத்தரவுக்கு அப்பால் எந்த தொலைபேசிகளும் பாதுகாப்பு பிரிவினரால் ஊடுருவப்படுவதில்லை என்றும் அதற்கு தேவையான உபகரணங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்றும் பாதுகாப்பு செயலர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.
ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் ஊடுருவப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க, முஜிபூர் ரஹ்மான் உள்ளிட்டோர் சபையில் இந்த குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.
அதற்கமைய, எதிர்க்கட்சி எம்.பிக்கள் அல்லது அரசாங்கத்துக்கு எதிரான அணியினரின் தொலைபேசிகள் பாதுகாப்புப் பிரிவினரால் ஊடுருவப்படுகின்றதா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-
அவ்வாறான எந்தவொரு தொலைபேசி ஊடுருவலும் இராணுவத்தினராலோ அல்லது புலனாய்வுப் பிரிவினராலோ முன்னெடுக்கப்படுவதில்லை. ஒருவேளை ஏதாவது பரிசோதனைகளுக்கு தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில், நீதிமன்றம் வழங்கும் உத்தரவுக்கமைய தொலைபேசி சேவை வழங்குநர்களால் வழங்கும் தகவல்களை தவிர வேறு எந்த தொலைபேசி ஊடுருவலும் முன்னெடுக்கப்படுவதில்லை. அதற்கான உபகரணங்களும் எம்மிடம் இல்லை- என்றார். (அ)

## கவிஞர் அஹ்னாப் ஜஸீம் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 16
கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீமை புத்தளம் மேல் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கி விடுதலை செய்தது.
இவரால் எழுதப்பட்ட நவரசம என்ற கவிதைத் தொகுப்பு இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளது என்ற குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் இவர் விடுதலை செய்யப்பட்டார். (அ)

## எரிவாயு நெருக்கடி நிலைக்கு தற்போது உள்ள தீர்வு என்ன?

### லிட்ரோ நிறுவனத்திடம் நீதிமன்றம் கேள்வி

கொழும்பு, டிசெ. 16
தற்போதைய எரிவாயு நெருக்கடியை தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்று நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு லிட்ரோ நிறுவனத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
எரிவாயு வெடிப்புச் சம்பவங்களுக்கு இழப்பீடு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.
இலங்கை தர நிர்ணயப் பணியகத்தின் நியமங்களுக்கு அமைவாகவே எரிவாயு விநியோகம் செய்வதாக லிட்ரோ நிறுவனம் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது.
ஸ்ரிக்கர் மூலம் சிலிண்டரில் காட்டப்படும் என்றும் அந்த நிறுவனம் உத்தரவாதம் வழங்கியது. (அ)

## உருக்குலைந்த நிலையில் நயினாதீவில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
நயினாதீவு தண்ணீர்த்தாங்கி குளத்துக்கரை அருகே அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.
குறித்த நபர் பல நாட்களுக்கு முன் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.
உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்படுவதால் இது வரை அடையாளம் காணப்படவில்லை. கடந்த வியாழக்கிழமையில் இருந்து நயினாதீவை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போயிருந்தார்.
சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக பொலிஸாரினால் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (அ)

# சிசிர மெண்டிஸ் சாட்சியமளிக்கமாட்டார்!

கொழும்பு, டிசெ. 16
ஈஸ்டர் தின தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மூன்றாவது சாட்சியாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானி சிசிர மெண்டிஸ் சாட்சியமளிக்க அழைக்கப்படமாட்டார் என சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமுக்கு அறிவித்துள்ளார்.
நீதிபதிகளான நாமல் பலாலே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷாதீன் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஏப்ரல் 21 தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சிசிர மெண்டிஸ் சாட்சியாளராக பெயரிடப்பட்டுள்ளார்.
எனினும், அவர் சாட்சியமளிக்க அழைக்கப்படமாட்டாரென சட்டமா அதிபர் நேற்று நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.
இதனையடுத்து, இந்த வழக்கு விசாரணைகளை ஜனவரி 18ஆம் திகதிவரை ஒத்தி வைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## தபால் ஊழியர் பகிஷ்கரிப்பால் 5 இலட்சம் கடிதங்கள் தேக்கம்!

கொழும்பு, டிசெ. 16
நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்களின் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மத்திய தபால் பரிமாற்றகத்தில் சுமார் 5 இலட்சம் கடிதங்கள் தேங்கியுள்ளன.
நேற்று ஊழியர்கள் வழமை போல் கடமைக்கு திரும்பியவுடன், கடிதங்களை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டார்.
கடந்த திங்கள் மாலை 4 மணி முதல் நேற்று முன் தினம் நள்ளிரவு வரை தபால் நிலைய ஊழியர்கள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.
ஆட்சேர்ப்பு நடவடிக்கை உள்ளிட்ட 24 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்களால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியின் செயலாளரே நெருக்கடி நிலைக்கு காரணம்

## சுதந்திரக் கட்சி கடும் சாடல்

**கொழும்பு, டிசெ. 16**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சகல பிரச்னைகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர பொறுப்பு கூறவேண்டும் எனத் தெரிவித்த சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அவரின் ஆலோசனைகளே நெருக்கடிக்கு காரணம் என்றும் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன் உரம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் நெல் விவசாயம் உள்ளிட்ட ஏனைய பயிர்ச்செய்கைகள் அனைத்தும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனைவிட பாரதூரமான பிரச்னையாக 6.7 மில்லியன் டொலர் நட்டஈட்டுத் தொகையை சீனாவுக்கு செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது. இந்த தொகையை தவறிழைத்தவர்கள் தனிப்பட்ட ரீதியில் செலுத்தவேண்டும். மாறாக அரசாங்கம் இதனை செலுத்தவேண்டிய தேவை கிடையாது.

சமையல் எரிவாயு சிலிண்டர்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கும் உரிய தரப்பினர் பொறுப்பு கூறவேண்டும். தர நிர்ணய சபையும் இது தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டும். நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையும் இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் பாரிய பொறுப்பு அமைச்சர்களுக்கு காணப்படுகிறது. எனவே அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து அமைச்சர்கள் தீர்மானங்களை எடுக்கவேண்டும். மாறாக அமைச்சர்கள் வீதி சமிஞ்ஞைகளைப் போன்று செயற்படக்கூடாது-என்றார். (அ)



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலியத் தூதுவர் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் டேவிட் ஹோலி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வைத்தியசாலையின் செயற்பாடுகள் பற்றியும் போதனா வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் அவுஸ்திரேலிய மருத்துவ உதவி அமையம் வழங்கும் உதவிகள் குறித்தும் பேசப்பட்டதாக யாழ். போதனா வைத்தி யசாலைப் பணிப்பாளர் தெரி வித்தார். (அ)

# ஜனாதிபதி ஏன் வெளிநாடு சென்றார் என்று தெரியாது

## கூறுகிறார் அநுர பிரியதர்சன யாப்பா

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதி, எதற்காக வெளிநாடு சென்றாரென தன்னால் கூற தெரியாதுள்ளதாகத் தெரிவித்த, ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா, அனைவருக்கும் நாம் முன்மாதிரியாக இருக்கவேண்டும். வெளிநாடு சென்று விடுமுறையைக் கழிப்பதற்கான நேரம் இதுவல்ல என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு தற்போது முகங்கொடுத்து கொண்டிருக்கும் பிரச்னைகள் தொடர்பில்



மக்களுடன் கலந்துரையாடி, துயரங்களை பகிர்ந்துகொள்ளும் நேரமிது. அப்போது தான் மக்களிடம் நம்பிக்கையை கட்டியெழுப்பலாம். அந்த நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காக எமக்கிருக்கும் சந்தர்ப்பத்தை சிந்தனையுடன் பயன்படுத்தவேண்டும்.

குறைந்தது இந்த சமையல் எரிவாயு பிரச்னைக்குக்கூட யார் பொறுப்பென தெரியவில்லை. வேறு நாட்டில் இவ்வாறு இடம்பெற்றிருந்தால் குறித்த நிறுவனங்களின் பிரதானிகள் கைது செய்யப்பட்டிருப்பர். ஆனால், இங்கு எதுவும் தெரியாததைப்போன்று இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையானது நாட்டில் அராஜகத்துக்கான வழியை ஏற்படுத்தும். இன்று நாட்டை வழிநடத்த அமைச்சரவைக்கு அப்பால் யாரோ உள்ளனர்.

நாட்டை வழிநடத்தும் தலைவரிடம் அவரைச் சூழவுள்ள அதிகாரிகள் பல போலி விடயங்களை கூறுகின்றனரென நினைக்கின்றேன். அதனால் பொருளாதாரம் தொடர்பான பிரச்னை அனைவரும் ஒன்று கூடி கலந்துரையாடவேண்டிய விடயமாகும்.

இந்த மாதம் நிறைவடைவதற்குள் அந்நிய செலாவணியை கொண்டு வருகிறோம் என, கூறுகின்றனர். ஆனால், அது ஒருபோதும் நடக்காதென அவர்களுக்கும் தெரியும். கேட்டுக்கொண்டிருக்கும் எமக்கும் தெரியும். முறையான பொறிமுறையொன்று இன்மையே அந்நிய செலாவணி எமக்கு கிடைக்காமைக்கான பிரதான காரணமாகும்-என்றார். (அ)

# விடுமுறைக்கு வெளிநாடு பறக்க தயாராகிவரும் அரசியல்வாதிகள்

கொழும்பு, டிசெ. 16

சுமார் 60 அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருட இறுதி விடுமுறையை கழிப்பதற்கு வெளிநாடுகளுக்குச் செல்ல தயாராகி வருகின்றனர் என பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடு செல்ல தயாராகும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வாழும் மற்றும் படிக்கும் தமது பிள்ளைகளைப் பார்க்க, விடுமுறை நாட்களில் அந்த நாடுகளுக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் மற்றுமொரு குழு, தமது விடுமுறையை நுவரெலியாவில் கழிக்கத் திட்டமிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வெடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஜெனரல் ஹவுஸ் என்ற விடுதியில் அவர்கள் முன்பதிவு செய் துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சாவகச்சேரிப் பகுதியில் ரயிலில் மோதுண்டு இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணத்திலிருந்து இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் நேற்று காலை சாவகச்சேரிப் பகுதியில் தண்டவாளத்தில் இருந்தவரை மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சாவகச்சேரி-கச்சாய் வீதி ரயில் கடவைக்கும்-சந்தையா வீதி ரயில் கடவைக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இவ்வனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதில் கல்வயல் முதலாம் கட்டை, சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான பிரகாஷ் என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த நபருக்கு காது கேளாமை காரணமாகவே இந்த விபத்து நேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(அ-02)

# சிறையில் இருந்து தப்பினார் கைதி

கொழும்பு, டிசெ. 16

பூஸா சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் நேற்று பிற்பகல் தப்பிச் சென்றுள்ளார் என ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

20 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை செலுத்தத் தவறியமைக்காக, மஹகும்புரவத்தையைச் சேர்ந்த 38 வயதான கைதி பூஸா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று மதியம் வெளியில் வேலை செய்துகொண்டிருந்தபோது அவர் தப்பிச் சென்றுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆனைக்கோட்டையிலும் எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக் கோட்டை - உயரப்புலம் பகுதியில் வசிக்கும், நல்லூர் பிர தேச செயலகத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரது இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியள வில் எரிவாயு அடுப்பு வெடித் துச் சிதறியுள்ளது.

மாலை 5.45 மணியளவில் வெடிக்க ஆரம்பித்த அடுப்பு இரவு 7.30 மணி வரையும் வெடித்துக் கொண்டிருந்ததாகவும் அதன்பின்னர் தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு சென்று அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் வீட்டில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும், மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டதாகவும் அவர்கள் மேலும் கூறினர். (அ)



# இலங்கையில் சீனாவிற்கு இந்தியாவால் பின்னடைவா?

**தமக்கு இலங்கை இல்லாது போனாலும், இந்த வலயத்தில் இந்தியாவிற்கு எதிராக செயற்படக்கூடிய நாடொன்றுடன் தாம் தொடர்புகளை பேணுகின்றோம் என்பதனை வெளிப்படுத்துவதற்காகவே மாலை தீவில் தமது திட்டத்தை ஸ்தாபிப்பதற்கு சீனா முன்வந்துள்ளது**

ரங்க சிறிலால்

இலங்கையின் வடக்குப் பகுதியில் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தயார் நிலை காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கிலுள்ள மூன்று தீவுகளில் மின்சக்தி திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இதற்கு முன்னர் சீன நிறுவனமொன்றுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சீனா குறித்த மின்சக்தி திட்டத்தை கைவிட தீர்மானித்திருந்த பின்னணியிலேயே, அதானி நிறுவனத்திற்கு வடக்கின் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி திட்டத்தை கையளிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் விசேட சலுகைகளை வழங்கி, நாட்டின் வெளிவிவகார கொள்கைகள் நிலையில்லாது காணப்பட்ட நிலையில், சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் காணப்பட்ட அதிகாரங்கள் தற்போது வலுவிழந்து வருவதாக சர்வதேச தொடர்புகள் குறித்த நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், குறித்த திட்டமானது இந்தியாவிற்கு எந்தளவு இலாபகரமானது? என்பது குறித்தே ஆராய்கின்றோம்.

### மூன்றாவது தரப்பினால் பாதுகாப்பு தொடர்பிலான பிரச்னை

யாழ்ப்பாணத்திற்கு சொந்தமான நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலை தீவு ஆகிய பகுதிகளில் திட்டமிடப்பட்ட மின்சக்தி திட்டத்தை தாம் கைவிட தீர்மானித்துள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம், கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிப்பொன்றை வெளியிட்டது.

"மூன்றாவது தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பிலான பிரச்னை" காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் ட்விட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்தியாவிற்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தில் கடந்த முதலாம் திகதி ஈடுபட்டிருந்த தருணத்திலேயே, சீன தூதரகம் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தது. இந்த உத்தேச மின்சக்தி திட்டம் கைவிடப்படும் சந்தர்ப்பத்திலேயே, மாலத்தீவில் 12 சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கத்துடன் நவம்பர் மாதம் 29ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக தூரகம் அறிவித்துள்ளது. "சினோ சோ ஹைப்ரிட் டெக்னாலஜி" என்ற சீன நிறுவனத்துடனேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### இந்தியாவின் அழுத்தம்?

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய பகுதிகளில் மின்சக்தி திட்டத்திற்கான விலை மனுக்கோரலை சீனாவிற்கு வழங்கியமைக்கு, இந்தியா 2021ம் ஆண்டு முதல் காலப் பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்கு கடுமை எதிர்ப்பை வெளியிட்டது.

எவ்வாறாயினும், யாழ்ப்பாணத்தை அண்மித்துள்ள குறித்த மூன்று தீவுகளிலும் மின்சக்தி கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கான ஒப்பந்தம், இந்த ஆண்டு ஜனவரி மாதம் கையெழுத்திடப்பட்டு, சீனாவிற்கு வழங்கப்பட்டது.

இந்த திட்டமானது, இலங்கை மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப் படுவதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் மின்சார விநியோகத்தை மேம்படுத்துவதற்குள்ள திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த நிலையில், இந்தியாவின் அழுத்தம் குறித்து, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச தொடர்புகள் குறித்த பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹசித் கந்தஉடஹேவா கருத்து வெளியிட்டார்.

"முதலில் சீனாவிற்கே இந்த திட்டம் கையளிக்கப்பட்டது. சீனாவிற்கு இந்த திட்டம் கையளிக்கப்பட்டதன் பின்னர், இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

ஏனெனில், குறித்த மூன்று தீவுகளும், கச்சத்தீவு மற்றும் இந்தியா - இலங்கை ஆகிய கடல் எல்லை பகுதியில் உள்ளமையே இதற்கான காரணம். இவ்வாறான வெளிநாட்டு தலையீடு அல்லது வெளிநாடொன்றின் மின்சக்தி திட்டம் இந்தியாவிற்கு அருகில் ஸ்தாபிக்கப்படுகின்றமையானது, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும். இதன்படி, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பிய இந்தியா, இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்திருந்தது"

### நெகிழ்வான வெளியுறவுக் கொள்கை

"அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளை சமப்படுத்தி செயற்பட்டதை நாம் அவதானித்தோம். குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை சமநிலைப்படுத்தி செயற்பட்டார். புதிய நிதி அமைச்சர் பதவியேற்றதன் பின்னர், சீனாவின் அதிகாரத்தை கட்டியெழுப்புவதற்கு பதிலாக, சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சலுகைகளை வழங்கி, இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை எப்படியாவது சமப்படுத்த தேவைப்பட்டது. இந்த மூன்று நாடுகளுக்கும் நாம் முக்கியத்துவம் வழங்குகின்றோம் என்பதனை வெளிகாட்ட வேண்டியிருந்தது. குறிப்பாக சலுகைகள் வழங்குவதை வெளிகாட்ட வேண்டியிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, அதானியின் வருகையின் பின்னர், இந்த தீவுகளை இந்தியாவிற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது" என கலாநிதி ஹசித் கந்தஉடஹேவா தெரிவித்தார்.

"சீனா தமது எல்லையை அண்மித்து முன்னெடுக்கும் திட்டத்தை இந்தியாவினால் நிறுத்திக் கொள்ள முடிந்தது. அதேபோன்று, வடக்கில் இந்தியாவிற்கு விசேட திட்டங்களை செயற்படுத்த முடிந்துள்ளது. இந்தியாவின் செயற்பாடுகள் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை காட்டுவதற்கே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். உண்மையில் இந்த திட்டம் இந்தியாவிற்கு எந்தளவிற்கு லாபகரமானது என்பதில் பிரச்னை உள்ளது"

"இந்தியாவின் பாதுகாப்பை உருவாக்கும் செயலாகும். உண்மையில், இலங்கையின் மின்சக்தி துறைக்குள் பிரவேசிப்பதற்கும், இலங்கையின் பொருளாதாரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் எந்தவொரு தேவையும் கிடையாது. அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை காண்பிக்கவே இந்த திட்டத்தை எடுத்துள்ளனர்" என அவர் கூறுகின்றார்.

### சம்பிக்க வெளிகொணர்ந்த விடயம்

"மின்சார சபையின் தலைவர் நவம்பர் மாதம் 25ஆம் திகதி நிதி அமைச்சின் செய லாளருக்கு கடிதமொன்றை எழுதுகின்றார். வடக்கு மாகாணத்தில் அதாவது, மன்னார் முதல் பூநகரி வரையான பிரதேசம் வரை 500 மெகா வோர்ட் காற்றாலை மற்றும் சூரிய சக்தி திட்டத்தை அதானி நிறுவனத்திற்கு உடனடியாக வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த கடிதத்தின் மூன்றாவது சரத்தில் கூறப்பட்டுள்ளது என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிக்கின்றார்.

கொழும்பில் டிசம்பர் மாதம் 6ம் தேதி இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"இந்த நாட்டின் கேள்விகள் இரவு வேளையிலேயே அதிகம் என்பதனை இந்த நாட்டின் பிரஜைகள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த கேள்வியானது, 3000 மெகா வோர்ட்டிற்கும் குறைவானது. காற்றாலை மற்றும் சூரிய மின்சார திட்டத்தின் மூலம் முழு நாட்டிற்கும் மின்சாரத்தை விநியோகிக்கும் வல்லமை, மன்னார் முதல் பூநகரி வரையான பிரதேசத்திற்கு உள்ளது. இந்த திட்டத்திற்கு மின்சார சபை விலை மனுக்கோரலை கோரியுள்ளது. இந்த விலை மனுக்கோரலுக்காக பெரும்பாலானோர் விண்ணப்பித்திருந்தனர். அவர்கள் அனைவரையும் ரத்து செய்து, அதானி நிறுவனத்திற்கு இதனை வழங்க போகின்றார்கள்" என அவர் மேலும் கூறினார்.

### அதானி மன்னாருக்கு விஜயம்

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு பகுதியை அபிவிருத்தி செய்யும் அதானி நிறுவனத்தின் தலைவரும், இந்தியாவின் முன்னணி செல்வந்தருமான கௌத்தம் அதானி குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் கடந்த ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த குழுவினர் ஒக்டோபர் மாதம் 24ம் தேதி நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

துறைமுகத்தின் மேற்கு பகுதியின் அபிவிருத்தி மற்றும் மின்சக்தி திட்டங்கள் குறித்து, இலங்கை அதிகாரிகளுடன் அவர்கள் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

எனினும், இந்த திட்டத்தை இந்தியாவிற்கு வழங்க அமைச்சரவை தீர்மானத்தை எட்டவில்லை என கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்திருந்தார்.

"அதனூடன் தொடர்புடைய தீர்மானம், உரிமை தரப்பிற்கு இடையில் கொடுக்கல் வாங்கல் முறையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. அமைச்சரவை தீர்மானம் எட்டப்படவில்லை" என அவர் கூறினார்.

### சீனாவிற்கு ராஜிய ரீதியில் பின்னடைவா?

சீனாவிற்கு ராஜதந்திர ரீதியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை என கலாநிதி ஹசித் கந்தஉடஹேவாவின் கருத்துக்கு அமைய வெளிப்படுகின்றது.

"சீனாவின் திட்டமொன்று இலங்கையில் இல்லாது போன ஒரு சந்தர்ப்பம். எனினும், வடக்கு பகுதியிலோ அல்லது துறைமுகத்தை அண்மித்த பகுதியிலோ சீனா இதற்கும் மேலாக விடயத்தை முன்னெடுக்கக்கூடும். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்து அல்ல. ஏதேனும் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும். பெரும்பாலும் திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து திட்டமொன்று ஆரம்பிக்கப்படும். இந்தியா - திருகோணமலை திட்டத்துடன், சீனாவும் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. பெரும்பாலும் அபிவிருத்தி திட்டமொன்றுக்கு சீனா நிதி வழங்கக்கூடும்" என அவர் கூறினார்.

தமக்கு இலங்கை இல்லாது போனாலும், இந்த வலயத்தில் இந்தியாவிற்கு எதிராக செயற்படக்கூடிய நாடொன்றுடன் தாம் தொடர்புகளை பேணுகின்றோம் என்பதனை வெளிப்படுத்துவதற்காகவே மாலத்தீவில் தமது திட்டத்தை ஸ்தாபிப்பதற்கு சீனா முன்வந்துள்ளது என சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹசித் கந்தஉடஹேவா தெரிவிக்கின்றார். ■




கொரோனா வைரஸை எதிர்க்கும் விவகாரத்தில் நன்கு பயிற்சி பெற்ற நோயெதிர்ப்பு அமைப்பு என்பது ஓமைக்ரோன் திரிபுக்கு சிக்கலானது மற்றும் அதன் வளர்ச்சிக்கு எதிரான சூழல் என்கிறார் ஜோனதன் பால்.

இப்பயிற்சியில் ஆன்டிபாடிகள் என்கிற எதிர்ப்பான்கள் மிகப்பெரிய நன்மை பயக்கும் விஷயம்.

# ஓமைக்ரோனுக்கு எதிராக இரு 'டோஸ்' தடுப்பூசி வேலை செய்யவில்லையா?

ஜேம்ஸ் கலேகர்

அதிகம் பிறழ்வடைந்த ஓமைக்ரோன் திரிபு, நம்மை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் தடுப்பூசிகளின் திறனை பெரிதும் பாதித்துள்ளது.

சில தடுப்பூசிகள் இரு டோஸ் செலுத்திக் கொண்ட பிறகும் ஓமிக்ரோன் திரிபுக்கு எதிராக கிட்டத்தட்ட எந்த வித பாதுகாப்பும் வழங்கவில்லை என்றாலும், தீவிர உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அபாயத்தை கணிசமாக குறைக்க வேண்டும்.

தற்போது புழக்கத்தில் உள்ள எல்லா தடுப்பூசிகளும் ஏறாத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன் பரவிக் கொண்டிருந்த கொரோனா திரிபுக்கு எதிராக செயல்பட உருவாக்கப்பட்டது.

எனவே, மூன்றாவது டோஸ் தடுப்பூசி அல்லது பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்வது பாதுகாப்பு விவகாரத்தில் ஏதேனும் மாற்றத்தைக் கொடுக்குமா அல்லது ஓமைக்ரோன் திரிபு கொரோனா தடுப்பூசிகளின் பாதுகாப்பை கடந்துவிட்டதா?

அதிர்ஷ்டவசமாக, நமக்குச் செலுத்தப்படும் தடுப்பூசி மருந்து ஒரே மாதிரியானதாக இருந்தாலும், மனித உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு பூஸ்டர் டோஸ் என்பது ஒரே மாதிரியான விளைவை ஏற்படுத்தாது.

மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின் உங்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு மிக அதிகம்.

**கொரோனா பள்ளி**

கொரோனவுக்கு எதிராக போராடுவதை உங்கள் நோயெதிர்ப்பு மண்டலம் கற்றுக் கொள்ள வேண்டும்.

உண்மையாகவே கொரோனா வைரஸை எதிர்கொள்ளும் போது, நோயெதிர்ப்பு மண்டலம் வைரஸை எதிர்கொள்ளப் பழகலாம். ஆனால் அது தவறாகச் செல்லும் அபாயம் அதிகம். தீவிர உடல் நலக்குறைவு ஏற்படும் அபாயமும் உள்ளது.

தடுப்பூசிகள் என்பது ஒரு பள்ளியைப் போன்றது. மனிதர்களின் நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு கொரோனா தொடர்பான கல்வியை பயிற்றுவிக்கும் ஒரு பாதுகாப்பான சூழல் அது.

முதல் டோஸ் தடுப்பூசி என்பது தொடக்கப் பள்ளியில் பயிற்றுவிக்கப்படும் கல்வி போன்றது, அது அடிப்படைகளை நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு கற்றுக் கொடுக்கிறது.

இரண்டாவது டோஸ் தடுப்பூசி நோயெதிர்ப்பு மண்டலத்தை மேனிலைப் பள்ளிக்கும், மூன்றாவது டோஸ் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதற்குச் சமமானது. எனவே நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு, கொரோனா வைரஸ் தொடர்பான புரிதலை ஆழப்படுத்தும்.

"நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு கொரோனா வைரஸ் தொடர்பான ஆழ்ந்த அறிவையும் புரிதலையும் ஏற்படுத்துகிறது" என நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் நச்சுயிரியல் நிபுணர் பேராசிரியர் ஜோனதன் பால் கூறினார்.

கொரோனா வைரஸை எதிர்க்கும் விவகாரத்தில் நன்கு பயிற்சி பெற்ற நோயெதிர்ப்பு அமைப்பு என்பது ஒமிக்ரோன் திரிபுக்கு சிக்கலானது மற்றும் அதன் வளர்ச்சிக்கு எதிரான சூழல் என்கிறார் ஜோனதன் பால்.

இப்பயிற்சியில் ஆன்டிபாடிகள் என்கிற எதிர்ப்பான்கள் மிகப்பெரிய நன்மை பயக்கும் விஷயம்.

இந்த ஒட்டும் திறன் கொண்ட புரதங்கள், கொரோனா வைரஸின் வெளிப்புறத்தில் தன்னைத்தானே ஒட்டிக் கொள்கின்றன. வைரஸை அழிக்கும் எதிர்ப்பான்கள் (ஆன்டிபாடிகள்) கொரோனா வைரஸை செயலிழக்கச் செய்வதால், வைரஸால் உடலில் இருக்கும் செல்லுக்குள் நுழைய முடியாமல் போகிறது. கொரோனா வைரஸின் மீதுள்ள ஆன்டிபாடிக்கள், "வைரஸைக் கொல்லுங்கள்" என குறிப்பிடும் நியான் விளக்கைப் போன்று செயல்படுகிறது.

இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்ட பின், உடலிலுள்ள வைரஸை அழிக்கும் எதிர்ப்பான்கள், ஒமிக்ரான் திரிபுக்கு எதிராக மிகவும் குறைந்த செயல்திறனோடு இருப்பதாக பல ஆய்வக பரிசோதனைகள் மற்றும் நிஜ உலக தரவுகள் குறிப்பிடுகின்றன.

நீங்கள் எந்த வித பாதுகாப்புமின்றி நோய் தொற்றுக்கு காத்திருக்கும் நபராக இருப்பீர் என்கிறார் இம்பீரியல் காலேஜ் ஆஃப் லண்டனைச் சேர்ந்த நோயெதிர்ப்பியல் நிபுணர் பேராசிரியர் டேனி ஆல்ட்மென்.

**மீண்டும் பள்ளிக்குத் திரும்புவோம்**

ஒவ்வொரு டோஸ் தடுப்பூசியும், உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தில் இருக்கும் ஆன்டிபாடிகளின் அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சியைத் தூண்டுகின்றன. மேம்பட்ட ஆன்டிபாடிகள், வைரஸைத் தேடி இன்னும் உறுதியாக தன்னை இணைத்துக் கொள்கின்றன. இதை ஆங்கிலத்தில் யுககவைல ஆயவரசயவழைெ என்கிறார்கள்.

"உங்கள் உடலில் உள்ள எதிர்ப்பான்கள் காலப்போக்கில் தங்களைப் புதுமைப்படுத்திக் கொள்ளும், நவீனப்படுத்திக்கொள்ளும்" என்கிறார் பேராசிரியர் ஆல்ட்மென்.

ஒருவேளை ஆன்டிபாடிகள் எனப்படும் நோய் எதிர்ப்பான்கள் கொரோனா வைரஸோடு இறுக்கமாக இணைய முடிந்தால், ஒமிக்ரான் திரிபுக்கு எதிர்ப்பான்களைக் கடப்பது சிரமமாக இருக்கும். ஒமிக்ரான் திரிபு அதிக பிறழ்வுகளைக் கொண்டது என்றாலும், அடிப்படையில் ஒரே மாதிரியான கொரோனா வைரஸ்தான். அதன் பல பாகங்கள் இன்னும் பெரிதாக மாறவில்லை.

மேற்கொண்டு செலுத்தப்படும் தடுப்பூசி டோஸ்கள், புதிய எதிர்ப்பான்களோடு நோயெதிர்ப்பு மண்டலத்தை விரிவுபடுத்துவதாக இருக்கும். அது கொரோனா வைரஸைக் கொல்ல பல புதிய வழிகளைக் கண்டுபிடிக்கும்.



செல்கள் அதீத ஒட்டுத்தன்மை கொண்ட நோய் எதிர்ப்பான்களை உருவாக்குகின்றன. மற்ற முதிர்ச்சியடையாத பீ செல்களால் கொரோனா வைரஸை அடையாளம் காண முடியும். ஆனால் அதனால் முழுமையாக செயல்பட முடியாதவையாக, வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக இருக்கும்.

"இது பல திசைகளில் பயணிக்கக் கூடியது, பல்கிப் பெருகும் போது அவை, புதிய கொரோனா திரிபைத் தொடர்ந்து சென்று தாக்கத்

**எண் விளையாட்டு**

கூடுதல் தடுப்பூசி டோஸ்களால் ஆன்டிபாடிகள் எனப்படும் நோய் எதிர்ப்பான்களின் தரம் மட்டுமல்ல, எண்ணிக்கையையும் அதிகரிக்கும்.

"அதிகம் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் போது, இரத்தத்தில் எதிர்ப்பான்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், ஆனால் அந்த பாதுகாப்பு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பது தெரியவில்லை. அதிக முறை கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வது, நீண்ட காலத்துக்கு நோயெதிர்ப்பு நினைவைக் கொடுக்கும்," என்கிறார் பேராசிரியர் சர்லஸ் பங்கம்.

ஓமைக்ரோன் திரிபுக்கு எதிராக இரண்டு டோஸ் தடுப்பூசி பலவீனமானது என, இது போன்ற ஆய்வுகளில், இதன் தாக்கம் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருடோஸ் தடுப்பூசிக்குப் பிறகு, பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொண்ட பின், கொரோனா தொற்று ஏற்படுவதிலிருந்து கிடைக்கும் பாதுகாப்பு 75 சதவீதம் வரை அதிகரிக்கிறது.

அதுபோக பூஸ்டர் டோஸ்கள் மனித நோயெதிர்ப்பு மண்டலத்துக்கு, எதிர்கால கொரோனா திரிபுகளுக்கு எதிராகவும் பாதுகாப்பு வழங்குகிறது.

மனித உடலில் உள்ள பீ -செல்கள் தான் ஆன்டிபாடிகளை அதிகளவில் உற்பத்தி செய்கின்றன. பூஸ்டர் செலுத்தப்பட்ட பின், முதிர்ச்சியடைந்த சில பீ தொடங்கும்" என்கிறார் பேராசிரியர் பால்.

பூஸ்டர் செலுத்திக் கொண்டால், உடலில் உள்ள டி செல்கள் எண்ணிக்கையில் அதிகரித்து, கொரோனா வைரஸைத் தாக்கும்.

டி-செல்கள் கொரோனா வைரஸைக் கண்டுபிடிக்க வேறொரு வழியைப் பயன்படுத்துகின்றன. உடலின் காவலர்களைப் போல ரோந்து செல்லும் டி-செல்கள், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள உடல் பாகங்களைக் கண்டுபிடிக்கின்றன. கொரோனாவால் எளிதில் பிறழ்வுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாத பாகங்களை டி செல்கள் கண்டுபிடிக்கின்றன.

எனவே, ஓமைக்ரோன் மனித உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தைக் கடந்து செல்ல முயற்சிக்கும் போது, ஒவ்வொரு தடுப்பூசி டோஸ் மற்றும் ஒவ்வொரு முறை கொரோனா தொற்றால் பாதிக்கப் படும் போதும், கொரோனா வைரஸை அழிக்க நம் உடலின் பாதுகாப்பு அமைப் புகளுக்கு கூடுதல் சாதனங்கள் கிடைக்கின்றன. "ஒரு வைரஸுக்கு எதிராக எப் போதுமே கிட்டத்தட்ட முழுமையான பாதுகாப்பு கிடைக்காது, எப்போதும் கிட்டத்தட்ட மீண்டும் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. நீங் கள் உங்களுக்கே தெரியாமல் அல்லது தொற்று ஏற்பட்ட தெரியாத அளவுக்கு மீண்டும் லேசாக தொற்றுக்கு உட்பட்டு வது மட்டுமே நீங்கள் செய்ய வேண்டும்" என்கிறார் பேராசிரியர்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்
நேரம் : 1 மணித்தியாலம்

4. கீழுள்ள தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

(i) கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு .......................... எனப்படும். ( ஒத்திகை / வெள்ளோட்டம் )

(ii) நமது முன்னோர் தமது அனுபவத்தின் மூலம் கண்டறிந்த உண்மைகளை மனத்தில் பதியும்படி சுருக்கமாக எடுத்துச் சொல்லும் தொடர் .................. ( பழங்கதை / பழமொழி )

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(i) விழாவிற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெறுகின்றன. 'தடல்புடல்' என்பதன் கருத்து .............................................. ( விறுவிறுப்பாக, ஆறுதலாக ) என்பதாகும்.

(ii) பிரச்சினைகள் வரும்போது அவற்றிற்குத் தைரியமாக முகங்கொடுத்தல் வேண்டும். "முகங்கொடுத்தல்" என்பதன் கருத்து ..................................................................... ( எதிர்கொள்ளல், ஓடிவிடுதல் ) என்பதாகும்.

6. (i) தரப்பட்ட பழமொழியைப் பூர்த்தி செய்க.

கேட்காத ..................................... பார்க்காத ...................................... பாழ்

(ii) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதித் திருக்குறளைப் பூர்த்தி செய்க.

உள்ளத்தால் ................................................................. உலகத்தார்

.............................................................................................. உளன்

7. சரியான விடையினை எழுதுக.

(i) அக்பர் சக்கரவர்த்தியின் முதன்மை மந்திரி யார்? ..........................................................

(ii) "சீயக்காய்" என்பதை எழுத்து வழக்கில் எழுதுக. ..........................................................

8. (i) "மாற்றான்" என்பதன் ஒத்த சொல் யாது? ..........................................................

(ii) "ஐக்கியம்" என்பதன் எதிர்ச்சொல் யாது? ..........................................................

(iii) தரப்பட்ட வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

எந்த எண் எனக்கும் ஒன்றும் புரியவில்லையே என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டான்


9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) குதிரைகளைக் கட்டும் இடம் ................................. ( பட்டி, லாயம், தொழுவம் )

(ii) இளவேனில், முதுவேனில், வசந்தம் போன்றவை ................................................. ஆகும். ( மாதங்கள், காலங்கள் )

10. தரப்பட்ட உருக்களுக்கான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)  .......................................

(ii)  .......................................

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(i) Watering the ....................................... ( Plants, Radio, Book )

(ii) Washing the ....................................... ( Television, Clothes, Clock )

12. தமிழ்க் கருத்தை எழுதுக.

(i) Is this yours? : ..................................................................................

(ii) Can I help you? : ..................................................................................

13. சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக.

වකුප්පරෛ : ........................................................................

வகுப்பறை : ........................................................................

## விடைகள்

| | | |
|---|---|---|
| 4. | (i)<br>(ii) | ஒத்திகை<br>பழமொழி |
| 5. | (i)<br>(ii) | விறுவிறுப்பாக<br>எதிர்கொள்ளல் |
| 6. | (i)<br>(ii) | கடனும் , பயிரும்<br>பொய்யா தொழுகின் / உள்ளத்து ளெள்ளாம் |
| 7. | (i)<br>(ii) | பீர்பால்<br>சிகைக்காய் |
| 8. | (i)<br>(ii)<br>(iii) | பகைவன்<br>பிளவு<br>"எந்த எண்? எனக்கும் ஒன்றும் புரியவில்லையே!" என்று சற்றக் குழப்பத்துடன் கேட்டான். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | (i)<br>(ii) | லாயம்<br>காலங்கள் | | |
| 10. | (i) | Chair | (ii) | Goat |
| 11. | (i) | Plants | (ii) | Clothes |
| 12. | (i)<br>(ii) | இது உங்களுடையதா?<br>நான் உங்களுக்கு உதவலாமா? | | |
| 13. | | பந்திகாமறய | | |

# பிரேக் இல்லாத வாகனம் போல் பயணிக்கின்றது ராஜபக்ஷ அரசு

## 5 ஆண்டுகளுக்கு ஆட்சியைத் தாருங்கள் என ஜே.வி.பி. சவால்




கொழும்பு, டிசெ. 16
"எங்களிடம் ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியைத் தாருங்கள். நாங்கள் செய்து காட்டுகின்றோம்" என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரேக் இல்லாத வாகனம் போலவே இந்த அரசு பயணிக்கின்றது. முடிவு எப்படி அமையும் எனத் தெரியவில்லை. நாட்டை கடும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டனர்.

தற்போது நாம் மக்களை நேரில் சந்திக்கின்றோம். ஆட்சியைப் பொறுப்பேற்கு மாறு அவர்கள் எம்மிடம் கோரிக்கை விடுக்கின்றனர். இதுவரை காலமும் பலமான எதிர்க்கட்சிக்கான ஆணையை வழங்குமாறே நாம் மக்களிடம் கோரினோம்.

தற்போது ஆட்சி அதிகாரத்தை கோருகின்றோம். நாட்டை ஐந்தாண்டுகளுக்கு எங்களிடம் தாருங்கள் சிறப்பாகச் செய்து காட்டுகின்றோம்" - என்றார். (இ)



## நாடு திரும்பினார் ஜனாதிபதி

### அமெரிக்கா பறந்தார் நிதி அமைச்சர்

கொழும்பு, டிசெ. 16
தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி இன்றே நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் அவசரமாக நேற்று நாடு திரும்பியுள்ளார்.

அதேவேளை, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நேற்று அதிகாலை அமெரிக்கா நோக்கிப் பயணமானார். நிதி அமைச்சருடன் அவரின் பாரியாரும் சென்றுள்ளார். (இ)

# அரசியல் நாடகம் செய்யவில்லை; நாட்டைப் பாதுகாக்கவே போராட்டம்

## அமைச்சர் விமல் பதிலடி



கொழும்பு, டிசெ. 16
"அரசியலை நாடகமாகக் கொண்டு செயற்படும் தரப்பினருக்கு, அரசுக்குள் இருந்துகொண்டு நாம் போராடுவது நாடகமாகவே தெரியும். ஏனெனில் அவர்களுக்கு நாடகத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது - புரியாது."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

'யுகதனவி' ஒப்பந்தத்துக்கு எதிராக அரச பங்காளிக் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைச்சரவையில் யுகதனவி உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை வெளிப்படையாகவே அறிவித்தோம். நீதிமன்றம்கூட சென்றுள்ளோம். வெளிப்படையாக எமது எதிர்ப்பை பதிவுசெய்கின்றோம். இதுவும் நாடகமென விமர்சிக்கின்றனர்.

ஆட்சியைக் கவிழ்க்க நாம் போராடவில்லை. அதற்கான அரசியல் காய்ச்சலும் எமக்கு ஏற்படவில்லை. நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. தாய் நாட்டுக்காகவே போராடுகின்றோம்" - என்றார். (இ)

### 150 அடி பள்ளத்தில் வீழ்ந்து வான் விபத்து; 2 பேர் காயம்

பதுளை, டிசெ. 16
பதுளை மாவட்டம், ஹப்புத்தளை புற நகர்ப் பகுதியில் ஹப்புத்தளை - கொழும்பு பிரதான வீதியில் வான் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வான் சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து, சீறிய பாதையொன்றில் தடம்புரண்டுள்ளது.

இந்த விபத்தில் வானின் சாரதியும், பயணித்த ஒருவரும் கடுங்காயங்களுக்குள்ளாகி ஹப்புத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஆரம்பகட்ட சிகிச்சைகளின் பின்னர் அவ்விருவரும் தியத்தலாவை அரசினர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

ஹப்புத்தளைப் பொலிஸார் இந்த விபத்து குறித்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வானின் சாரதியின் நித்திரைக் கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. (இ)



### அமெரிக்கா பறக்க முன்

# 'மொட்டு' எம்.பிக்களுடன் பஸில் மந்திராலோசனை



கொழும்பு, டிசெ. 16
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தலைமையில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கான வழிமுறைகள், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா என்பன உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

அதேவேளை, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று அதிகாலை அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் அவர் நேற்றுமுன்தினம் அவசரமாக ஆலோசனை நடத்தியுள்ளமை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. (இ)

# பாராளுமன்ற அமர்வு ஏன் இடைநிறுத்தம்?

## மரிக்கார் எம்.பி. கேள்விக்கணை

கொழும்பு, டிசெ. 16
'கோப்' மற்றும் 'கோபா' குழுக்களின் தலைமைப்பதவிகளை மாற்றியமைக்கவே பாராளுமன்ற அமர்வை ஜனாதிபதி இடைநிறுத்தியுள்ளார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கூறியதாவது:-

"அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழு (கோபா) ஆகியவற்றின் தலைமைப் பதவியை ஆளுங்கட்சியினரே வகிக்கின்றனர்.




அவர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றனர். அரச நிறுவனங்களில் நடக்கும் ஊழல்கள், மோசடிகள் அம்பலமாகின்றன. இதனால்தான் மேற்படி குழுக்களை கலைத்து புதியவர்களை நியமிக்கும் நோக்கில் பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டால், புதிய அமர்வு ஆரம்பமாகும்போது புதிய தெரிவுக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது" - என்றார். (இ)

# காஸ் வெடிப்பால் பாதிக்கப்படுவோருக்கு ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவி

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 16
"நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்படும் அனைவருக்கும் தேவையான சட்ட உதவிகளை ஐக்கிய மக்கள் சக்தி இலவசமாக வழங்கும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தரமற்ற அரசைக் கொண்டுள்ள நாட்டிலிருந்து தரமான எதையும் எதிர்பார்க்க முடியாது எனவும், தரமற்ற ஆட்சியை அகற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ)

# ஒமைக்ரோன் தொற்றை எளிதாக எண்ணாதீர்கள்!

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, டிசெ. 16

கொரோனா வைரஸின் உருமாற்றமான ஒமைக்ரோன் வைரஸ், உலகின் பல நாடுகளுக்குப் பரவிவிட்டது. இதுவரை 70 நாடுகளுக்களும் அதிகமாக பரவியுள்ளது. இலேசான பாதிப்புதான் இருக்கும் என்று யாரும் எளிதாக நினைக்க வேண்டாம் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு டுவிட்டரில் வெளியிட்ட அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒமைக்ரோன் வைரஸ் தற்போது உலகளவில் 77 நாடுகளுக்குப் பரவிவிட்டது. உண்மையில் இன்னும் அதிகமான நாடுகளில் ஒமைக்ரோன் பரவல் இருக்க வேண்டும். அது கண்டுபிடிக்கப் படாமல் இருக்கலாம்.

இதற்கு முன் நாங்கள் பார்த்திராத வகையில், ஒமைக்ரோன் வைரஸ் பரவல் வேகம் அதிகமாக இருக்கிறது. உலக மக்கள் ஒமைக்ரோன் வைரஸ் பாதிப்பு இலேசானதாக இருக்கும் இருக்கும் என உதாசினப்படுப்படுத்துகிறார்கள் என்பது கவலையாக இருக்கிறது.

உறுதியாகச் சொல்கிறோம், எங்களுக்குத் தெரிந்தவரை இந்த வைரஸ் குறித்து நாம் குறைத்து மதிப்பிடுகிறோம். ஒமைக்ரோனால் உடல்நலப் பாதிப்பு குறைவாக இருந்தாலும், அதன் பரவல் நோயால் பாதிப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து நாட்டின் சுகாதார அமைப்புமுறையேயே செயலிழக்கச் செய்து விடும்.

மக்கள் தொடர்ந்து கொரோனா வைரஸ்




தடுப்பு முறைகளைக் கடைபிடிக்கவேண்டும். தடுப்பூசிக்கு பதிலாக முகக்கவசம், தடுப்பூசிக்கு பதிலாக சமூக விலகல், தடுப்பூசிக்கு பதிலாக திறந்த வெளியிடம், கைகளை அடிக்கடி கழுவுதல் என்று இல்லாமல் அனைத்தையும் கடைபிடிக்க பிடிக்கவேண்டும். தடுப்பூசியை கண்டிப்பாகச் செலுத்தவேண்டும். அனைத்தையும் தொடர்ந்து, சிறப்பாகக் கடைபிடிக்கவேண்டும்.

ஒமைக்ரான் வைரஸ் பரவல் இருக்கும் நாடுகளில் தற்போது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இந்த ஒமைக்ரானுக்கு எதிராக பூஸ்டர் தடுப்பூசியும் சிறப்பாகச் செயல்படுமா என்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை.

ஒமைக்ரான் வைரஸ் பரவல் அதிகரிக்கும் போது, மருத்துவமனையில் பாதிக்கப்படுவோர் மற்றும் அது தொடர்பான உயிரிழப்புகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் - என்றுள்ளது. (அ)



# டெல்டா-ஒமைக்ரோன் கலந்த 'இரட்டைத் தொற்று' ஆபத்து!

## இரண்டினதும் இணைவு மேலும் புதுத் திரிபுகளை உருவாக்கலாம்!

லண்டன், டிசெ. 16

ஏற்கனவே பரவியுள்ள டெல்டா திரிபும் தற்சமயம் தோன்றியுள்ள ஒமைக்ரோன் திரிபும் ஒரே சமயத்தில் ஒருவருக்குத் தொற்றக்கூடிய ஆபத்து உள்ளது. விரைவில் மிகக் குறுகிய காலத்தில் இந்த இரு திரிபுகளும் இணைந்து கொள்ளும் ஏதுநிலை காணப்படுகிறது.

"மொடோனா" தடுப்பூசி நிறுவனத்தின் தலைமை மருத்துவ நிபுணர் டாக்டர் போல் பேர்ட்டன் லண்டனில் நேற்று அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் குழுவினருடனான கூட்டத்தில் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

ஒமைக்ரோன் ஒர் உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என நினைக்கிறேன். மூன்று நாட்களில் அது இரட்டிப்பு வேகத்தைக் காட்டியிருக்கிறது. ஒருவர் உடலில் இரண்டு வைரஸ்களையும் காவ முடியும். அது உண்மையில் மிகமோசமானது. ஏனெனில் அவை இரண்டும் மரபணுக்களைப் பகிர்ந்து கொள்ளவும் மரபணுக்களை உருவாக்குவதற்கும் அது வாய்ப்பளிக்கிறது.

இரட்டைத் தொற்றுக்கு இலக்காகுவது மோசமான உயிராபத்தை ஏற்படுத்துமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இரண்டு திரிபுகளது இணைவு தனித்தனியே வேறு புதிய திரிபுகள் உருவாகுவதற்கு மிகவும் வாய்ப்பானதாகும்.

- இவ்வாறு அவர் அங்கு தெரிவித்தார்.

இரண்டு வைரஸ் திரிபுகள் ஒருவருக்கு ஒரேசமயத்தில் தொற்றுவது அரிதானது என்றே நம்பப்பட்டுவருகிறது. முன்னர் பெல்ஜியம் நாட்டில் 90 வயதான பெண் ஒருவர் கொரோனா வைரஸின் 'அல்பா', 'பேற்றா' ஆகிய இரண்டு திரிபுகள் தொற்றிய நிலையில் உயிரிழந்தார். அவர் தடுப்பூசி எதனையும் பெற்றிருக்கவில்லை.

இதேவேளை, லண்டனில் நாளாந்தத் தொற்றுக்களில் 44 வீதமானவை ஒமெக்ரோன் திரிபினாலேயே ஏற்படுவதாக இங்கிலாந்தின் சுகாதாரப் பாதுகாப்பு முகவரகத்தைச் சேர்ந்த மருத்துவர் சுசன் ஹொப்கின்ஸ் தெரிவித்தார்.

ஒமைக்ரோன் பரவத் தொடங்கிய பின்னர் மறு தொற்றுக்கு இலக்காவோரது எண்ணிக்கை அதிகரித்துள்ளது

டெல்டாவுடன் ஒப்பிட்டால் ஒமைக்ரோன் மூன்று முதல் எட்டு மடங்கு வரை மறு தொற்றை ஏற்படுத்துகிறது.

அதாவது ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு ஆளாகியவர்கள் பலரை மீண்டும் ஒமைக்ரோன் தாக்கிவருகிறது - என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இதுவரை உருவாகிய கொரோனா வைரஸின் திரிபுகள் எதுவுமே ஒமைக்ரோன் போன்று மிக வேகமாகப் பரவியதில்லை என்ற தகவலை உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

உலகெங்கும் இதுவரை 77 நாடுகளில் ஒமைக்ரோன் பரவியுள்ளது. இதைவிடத் தெரியாத வாறு மேலும் பல நாடுகளுக்கும் அது பரவியுள்ளது. மக்கள் ஒமைக்ரோன் திரிபைக் குறைந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்றே கணிக்கிறார்கள்.

ஆனால் ஆயத்த நிலையில் இல்லாத சுகாதாரக் கட்டமைப்புகளை மோசமாகப் பாதிக்கும் அளவுக்கு அது நோயாளர்களை உருவாக்கி விடுமோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலையில் நிலடுக்கம்!

காபூல், டிசெ. 16

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. பைசாபாத் நகருக்கு மேற்கே 33 கி.மீ. தொலைவில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாக ஆப்கானிஸ்தானின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதமோ அல்லது பொருள் சேதங்களோ எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை ஆப்கானிஸ்தானில் ரிச்டர் அளவுகோலில் 4.3 அளவான மிதமான நிலநடுக்கம் பதிவானது. இந்த அதிர்வு பைசாபாத்தில் இருந்து 145 கி.மீ தொலைவில் மையம் கொண்டிருந்தது.(அ)

# இந்திய ஹெலி விபத்து; வருண் சிங் உயிரிழப்பு

புதுடில்லி, டிசெ. 16

ஹெலிகொப்டர் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குரூப் கப்டன் வருண் சிங் மரணமானார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் மலை பகுதியில் முப்படைகளின் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் ராணுவ வீரர்கள் சென்ற ராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் முப்படைத் தளபதி பிபின் ராவத், அவர் மனைவி உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே, விபத்தில் சிக்கிய விமானத்தின் குரூப் கப்டன் வருண்சிங் என்பவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டார்.

80 சதவீத தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்து வந்தன.

இந்நிலையில், நேற்று காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என விமானப் படை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (அ)





# ஹெய்ட்டியில் எரிபொருள் தாங்கி வெடித்து சிதறிப் பெரும் விபத்து!

## 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

போர்ட் ஓவ் பிரின்ஸ், டிசெ.16

ஹெய்ட்டியில் இரண்டாவது பெரிய நகரமான கேப் - ஹைடியனில் எரிபொருள் தாங்கி கவிழ்ந்து வெடித்து தீ பற்றியதில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர் என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட நிலையில் இறப்பு எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளதாக கேப் - ஹைடியன் நகர முதல்வர் பியர் யுவ்ரோஸ் கூறியுள்ளார்.

பெற்றோல் கொள்கலன் விபத்துக்குள்ளாகி கவிழ்ந்ததை அடுத்து அங்கு குவிந்த அயல் கிராம மக்கள் பெற்றோலை கொள்கலன்களில் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது திடீரென கொள்கலன் தீப்பற்றி வெடித்துச் சிதறியது. இதுவே அதிகளவானவர்கள் உயிரிழக்கக் காரணமாக அமைந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கேப் - ஹைடியனில் கிழக்கு முனையில் உள்ள சான்மேரி பகுதியில் உள்ளூர் நேரப்படி கடந்த திங்கட்கிழமை நள்ளிரவில் பெற்றோல் தாங்கி கவிழ்ந்து வெடித்துத் தீப்பற்றியது.

இதேவேளை, இந்த அசம்பாவிதத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 03 நாட்கள் தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என ஹெய்ட்டி அரசு அறிவித்துள்ளது.

கரீபியன் நாடான ஹெய்ட்டி இந்த ஆண்டு அதிகரித்த வன்முறைகளால் மோசமாக பாதிக்கப்பட்டது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் விநியோகம் கடந்த மாதம் மீண்டும் தொடங்கியது.

கடந்த ஜூலை மாதம் ஹெய்ட்டி ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டதிலிருந்து அங்கு வன்முறைக் கும்பல்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



எல். பி. எல். இருபது - 20

## சீக்குகே சிக்ஸர் மழை; கொழும்பு அணி வெற்றி!

கொழும்பு, டிசெ. 16

சீக்குகே பிரசன்ன 6 பந்துகளில் பறக்கவிட்ட 5 சிக்ஸர்களால் கண்டி அணியை இலகுவாக வீழ்த்தியது கொழும்பு அணி.

எல். பி. எல். இருபது - 20 தொடர் கொழும்பு, ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் மாலை நடந்த போட்டியில் கண்டி வோரியர்ஸ், கொழும்பு ஸ்ரார்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொழும்பு ஸ்ரார்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்திருந்தது. இதனால், கண்டி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 146 ஓட்டங்களை எடுத்தது.

இந்த இலக்கைத் துரத்திய கொழும்பு அணிக்கு 18 ஓவர்கள் முடிவில் 37 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. ஆறாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய சீக்குகே பிரசன்ன 6 பந்துகளில் 5 சிக்ஸர்களை விளாசி 32 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் கொழும்பு அணி 19.4 ஓவர்களில் வெற்றியை தன்வசப்படுத்தியது.

முன்னதாக 5ஆவது விக்கெட்டாக வீழ்ந்த தினேஷ் சந்திமால் 27 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய கண்டி வோரியர்ஸ் அணிக்கு தொடக்கம் கொடுத்த கென்னர் லூயிஸ் 44 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்களைக் குவித்தார். மற்றோர் ஆரம்ப வீரரான சரித் அசலங்க 28 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் எவரும் சோபிக்காத நிலையில் 9 விக்கெட்களை இழந்த கண்டி வோரியர்ஸ் 20 ஓவர்களில் 146 ஓட்டங்களைப் பெற்றது.

கொழும்பு அணிக்காக பந்துவீசிய துஷ்மந்த சாமீர 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய கொழும்பு அணி 5 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

நிமேஷ் விமுக்தி 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக சீக்குகே பிரசன்ன தெரிவானார்.

எல். பி. எல். இருபது - 20

# காலி கிளாடியேற்றர்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி



கொழும்பு, டிசெ. 16

தம்புள்ளை அணியை 9 ஓட்டங்களால் வெற்றி கொண்ட காலி அணி புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

எல். பி. எல். இருபது - 20 தொடர் கொழும்பு, ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் தம் புள்ளை ஜியான்ட்ஸ், காலி கிளாடியேற்றர்ஸ் அணிகள் மோதின.

ஆரம்பத்திலேயே மழை குறுக்கிட்டு போட்டியை தாமதப் படுத்தியதால் 14 ஓவர்களாகக் குறைக்கப்பட் டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ளை அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், காலி கிளடியேற்றர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடி 7 விக்கெட் கள் இழப்புக்கு 134 ஓட்டங்களை பெற்றது.

நடுவரிசை வீரர்களால் ஓட்டங்களை பெற முடியாவிட்டாலும், தலைவர் பானுக ராஜபக்ஷ, குசல் மெண்டிஸ் மற்றும் தனுஷ்க குணதிலக ஆகியோரின் துடுப்பாட்டம் அணிக்கு வலு சேர்த்தது.

குணதிலக மற்றும் குசல் மெண்டிஸ் இணை வேகமான தொடக்கத்தை ஏற்படுத்தி முதல் விக்கெட் டுக்கு 17 பந்துகளில் 30 ஓட்டங்களை சேர்த்தது.

குணதிலக 22 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இம்ரான் தாகீரின் பந்து வீச்சில் போல்ட் ஆனார். தொடர்ந்து மெண்டிஸ /டன் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 20 பந்துகளில் 38 ஓட்டங்களை குவித்தார் பானுக ராஜபக்ஷ.

இந் நிலையில் 7 ஆவது ஓவரின் முதல் பந்தில் குசல் மெண்டீஸ் 17 பந்துகளில் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க காலி அணியின் ஓட்ட வேகம் குறைவடைந்தது.

எவ்வாறெனினும் 14 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களை குவித்தது காலி கிளடியேற்றர்ஸ்.

135 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய தம்புள்ளை அணியால் 5 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்களை மாத்திரம் எடுக்க முடிந்தது.

அணியின் ஆரம்ப வீரராக களமிறங்கிய நிரோஷன் திக்வெல்ல முதலாவது ஓவரின் மூன்றாவது பந்துவீச்சில் டக் அவுட் ஆன போதிலும் இரண்டாவது விக்கெட்டுக் காக கைகோர்த்த பில் சால்ட் மற்றும் ஜனித் லியனகே இணை 90 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

இவர்களின் இணைப்பாட்டம் வலுவாக இருந்த போதிலும் இறுதியில் தம்புள்ளை அணியினரால் வெற்றி இலக்கை அடைய முடியவில்லை.

பிலிப் சால்ட் 29 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பௌண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஜனித் லியனகே 34 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த வெற்றியின் மூலம் பட்டியலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது காலி கிளடியேற்றர்ஸ் அணி.

யாழ்ப்பாணம் கிங்ஸ், காலி கிளாடியேற்றர்ஸ், தம்புள்ளை ஜியான்ட்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறிய நிலையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறப் போகும் நான்காவது அணி எது என்ற எதிர்பார்ப்பு தற்போது எழுந்துள்ளது.

# ஒருநாள் தொடரில் கோலி பங்கேற்பார்!

புதுடில்லி, டிசெ. 16

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாவேன் என்று இந்திய அணியின் டெஸ்ட் அணித் தலைவர் விராட் கோலி அறிவித்துள்ளார்.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதியும், ஒருநாள் தொடர் ஜனவரி 19 ஆம் திகதியும் தொடங்குகின்றன. ஒருநாள் தொடரின் அணிக்கும், டெஸ்ட் அணிக்கும் உபதலைவராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டார்.



ரோஹித் சர்மா காயம் காரணமாக டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார். இந்நிலையில் ஒருநாள் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட விராட் கோலி பங்கேற்க மாட்டார் என்று தகவல்கள் பரவின.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்குச் செல்வதற்கு முன்பு செய்தியாளர்களை சந்தித்த விராட் கோலி கூறியதாவது:

“ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் விளையாட நான் எப்போதும் தயாராக உள்ளேன். என்னிடம் இக்கேள்வியைக் கேட்கக்கூடாது. நான் கலந்துகொள்ளவில்லை என செய்தி வெளியிட்டவர்களைக் கேட்கவேண்டும். இதுபோன்ற செய்திகளை வெளியிடுபவர்கள் நம்பத் தகுந்தவர்கள் அல்லர். ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாட நான் எப்போதும் ஆர்வமாக இருப்பேன்” - என்றார்.



# ஆஷஷ் இரண்டாவது போட்டி இங்கிலாந்து அணி அறிவிப்பு!

அடிலெய்ட், டிசெ. 16

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆஷஷ் தொடர், இந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி பகல் - இரவு போட்டியாக இன்று ஆரம்பமாகின்றது. அடிலெய்டில் நடக்கும் இந்தப் போட்டிக்கான 11 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து அணி நேற்று அறிவித்தது.

இதில், வேகப்பந்து வீச்சாளர்களான பிரோட், அண்டர்சன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். மார்க் வூட் அணிக்கு உள்வாங்கப்படவில்லை.

அணி விவரம்

ஜோ ரூட் (அணித் தலைவர்), பேர்ன்ஸ், ஹமீது, மலன், ஸ்ரோக்ஸ், போப், பட்லர் (விக்கெட் காப்பாளர்), வோக்ஸ், ரொபின்சன், லீச், பிரோட், அண்டர்சன்.

(ஐ)



# நோர்வூட் வித்தியாலய மாணவர்கள் 14 பேர் நேற்று குளவி கொட்டி பாதிப்பு

ஹற்றன், டிச. 16

ஹற்றன் கல்வி வலயத்துக் குட்பட்ட நோர்வூட் எலிபடை தமிழ் வித்தியாலய மாணவர்கள் 14 பேர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது, அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடே இவ்வாறு கலைந்து அவர்களைக் கொட்டியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தரம் 5,7,8, 9,10,11 வகுப்பறைகளைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களில் 4 பேர் தொடர்ந்தும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், 10 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# வெடித்துச் சிதறும் எரிவாயு அடுப்புகள்

நானுஓயா, டிச. 16

நானுஓயா, கிலாரண்டன் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுக் காலை எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குறித்த வெடிப்புச் சம்பவத்தால் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், வீட்டின் சமையலறைக்கு மாத்திரம் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

நானுஓயாவில் இப்பகுதியில் இதற்கு முன்னரும் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, டிச. 16

காலி, ரன்தம்பே இராணுவக் கல்லூரியில் கடமையாற்றி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார் என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளார்.

குறித்த இராணுவச் சிப்பாய் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை, டஸ்பியா தோட்டத்தைச் சேர்ந்த 21 வயது இராணுவச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ரன்தம்பே இராணுவப் பயிற்சி பாடசாலை அதிகாரிகளால் தெல்தெனிய பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவ முகாமில் உள்ள பல அதிகாரிகளிடம் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# அரசை விரட்டியடிக்கும் காலம் நெருங்கிவிட்டது

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, டிச. 16

ஆட்சியிலுள்ள ராஜபக்ச குடும்ப அரசை விரட்டியடிக்கும் காலம் நெருங்கிவிட்டது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கோப் மற்றும் கோப்பா குழுக்களுக்கு அரசியல்வாதிகளை நியமிப்பதற்காகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்.

கோப் மற்றும் கோப்பா குழுக்களின் தலைவர்களாகச் செயற்பட்ட பேராசிரியர்களான சரித்த ஹேரத் மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர், தற்போதைய அரசின் ஊழல், மோசடிகள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளதால் இந்த விடயத்தில் அதிருப்த்திய டைந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ராஜபக்ஷ நிறுவனம் பாராளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளது.

அரசு எத்தகைய நாடகத்தை நடத்துகின்றது என்பதை சிறுவர்களும் நன்கு அறிவர்.

மீண்டும் பாராளுமன்றம் கூடும்போது கோப் மற்றும் கோப்பா குழுக்களின் தலைவர்களாக ராஜபக்ஷ குடும்பத்திலுள்ளவர்களை நியமித்தாலும் ஆட்சேபிப்பதற்கு ஒன்றுமில்லை" - என்றார். (இ)

# ஆளுங்கட்சியினரால் கூட இந்த அரசு கவிழ்க்கப்படும்

## நிலைமை மோசம் என்கிறது தொழிலாளர் தேசிய சங்கம்




ஹற்றன், டிச. 16

"ஆளுங்கட்சி மூலம்தான் இந்த அரசுகூட கவிழ்க்கப்படும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்."

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

தற்கால அரசியல், தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல வேறு விடயங்கள் தொடர்பாக தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதேச மட்ட முக்கியஸ்தர்கள், மாவட்ட தலைவர்கள், அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினரின் கருத்துக்களைப் பெற்று தெளிபடுத்தும் கூட்டம் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப ஹற்றன் அஜந்தா விருந்தகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சியின் பிரதி நிதி செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன், கட்சியின் பொது செயலாளர் எஸ்.பிலிப், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெருக்கடியான சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்னும் 3 மாதங்களுக்குள் இந்த நிலைமை மேலும் மோசமாகும். எனவே, தனது இயலாமையை ஏற்றுக்கொண்டு ஆட்சியைக் கைவிட்டு, இந்த அரசு செல்ல வேண்டும்.

நாட்டிலே ஜனநாயகம் இல்லை. அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கான முனைப்புகளே இடம்பெறுகின்றன. மக்கள் பிரதிநிதிகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை. ஆளுங்கட்சியில் உள்ள பங்காளிக்கட்சி உறுப்பினர்களே தாக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது. எனவே, ஆளுங் கட்சி மூலம்தான் இந்த அரசுகூட கவிழ்க்கப்படும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நாட்டில் பல பிரச்சினைகள் தாண்டவமாடும் நிலையில் ஜனாதிபதி வெளிநாடு செல்கின்றார். நிதி அமைச்சரும் அமெரிக்கா செல்கின்றார்.

அதேவேளை, சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்மானம் எட்டப்பட்டு வர்த்தமானி மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உறுதிப்படுத்தப்பட்டது. பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து இதனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினர் கொண்டாடினர். வர்த்தமானி மூலம் வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை. அதற்கான அழுத்தங்களை அரசில் இருப்பவர்கள் பிரயோகிக்க வேண்டும். அதனை விடுத்து தற்போது போராட்டங்களை நடத்துவது நாடகமாகும்" - என்றார். (இ)

# மக்கள் பிரச்னைக்குத் தீர்வு இன்றேல் இந்த அரசு கட்டாயம் வெடித்து சிதறும்

கொழும்பு, டிச. 16

மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் இந்த அரசு கட்டாயம் வெடித்துச் சிதறும் நிலைமை ஏற்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசு வெடித்துச் சிதறாமல் இருப்பதற்கான பொறுப்பை பிரதான கட்சியே பொறுப்பேற்க வேண்டும். அரசு வெடித்துச் சிதறுவதும் சிதறாமல் இருப்பதும் பிரதான கட்சியின் தலைமையிலேயே உள்ளது.

ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு பயணிப்பதற்கு பிரதான கட்சியில் உள்ளவர்கள் தெரிந்துகொள்ள



வேண்டும்.

நாட்டு மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு நாடு நல்ல நிலைமைக்குச் சென்றால் அரசு வெடித்துச் சிதறுவதற்கான நிலைமை ஏற்படாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பவர்கள் வெளியேற்றப்படக்கூடியவர்கள் அல்லர். கட்சியில் இருப்பவர்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று குறைபாடுகள் காணப்படும் இடங்களில் கட்சியின் சார்பில் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற அமர்வை ஒத்திவைத்தனூடாக பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட விசேட குழுக்களின் தலைமைப் பதவிகளிலேயே மாற்றங்கள் ஏற்படும். நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படாது. விசேட குழுக்களுக்கு புதிய தலைவர்களை நியமிக்க நேரிடும்.

பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டமை இதற்கு முன்பும் பல தடவைகள் இடம் பெற்றுள்ளன. பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு முழுமையாக உள்ளது" - என்றார். (இ)

# கத்திக்குத்தில் ஒருவர் காயம்

கொழும்பு, டிச. 16

கொழும்பு, செட்டியார் தெரு பகுதியிலுள்ள தங்க ஆபரண விற்பனை நிலையத்தில் நேற்று முற்பகல் கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தங்காபரண விற்பனை நிலையத்தில் இருந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும், தனிப்பட்ட பிரச்னையே கத்திக்குத்துக்குக் காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கத்திக்குத்தில் படுகாயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)



## தனி சிங்களத்தில்...

திரம் இருந்தமையால், அதை தமிழ் மொழியில் அனுப்பும்மாறும், அதுவரை அதை ஏற்று தன்னால் விசாரணைக்கு சமுகமளிக்க முடியாது என்றும், தமிழ் மொழியிலான ஒரு மின்னஞ்சல் பதில் கடிதத்தை, விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மனோ கணேசன் எம்பி அனுப்பி வைத்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி ஊடகங்களுக்கு கூறியவை வருமாறு;

இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் நீண்டகாலமாக நடக்கின்றன. பல எதிரணி எம். பிக்கள் பலமுறை அழைக்கப்பட்டார்கள். நான் அழைக்கப்படவில்லை. இந்நிலையில், இப்போது திடீரென நான் அழைக்கப்பட்டுள்ளேன். ஏன் இந்த திடீர் அழைப்பு எனத் தெரியவில்லை. தனது மூன்றில் இரண்டு பலத்தை பயன்படுத்தி, கடந்த ஆட்சியின் முழு அமைச்சரவையையும், குற்றம் சாட்டி தண்டனைக்கு உள்ளாக்க முடியும் என்ற பாணியில் ஜனாதிபதி சமீபத்தில் பேசியிருந்தார். அதன் வெளிப்பாடோ இது வெனத் தெரியவில்லை.

இந்த அழைப்பாணை முழுக்க சிங்கள மொழியில் மாத்திரம் இருக்கின்றது. இந்நிலையில், இதை ஏற்று என்னால், விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு வர முடியாது என அறிவித்து விட்டேன். அத்துடன், எனக்கு சிங்கள மொழியில் இந்த அழைப்பாணை அனுப்பி இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஆணையாளர்கள், இலங்கை அரசியலமைப்பின் 4ஆம் அத்தியாயம், 22ஆம் விதி (2), (a) பிரிவுகளை மீறியுள்ளனர் எனவும் சுட்டிக்க காட்டி உள்ளேன்.

எதுவானாலும் முதலில் தமிழ் மொழியில் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை வரட்டும். அப்புறம் விசாரணைகளை அவசியமானால் சந்திப்பேன். ஆனால், அங்கேயும் பிழையில்லா தமிழ் மொழியில் இவர்கள் எனது வாக்குமூலத்தை எழுதி பதிவு செய்ய வேண்டும் - என்றும் கூறினார்.

## யாழ்ப்பாணம்...

செய்தியாளர்களை சந்தித்தபோது யாழ். மாநகர சபையின் வரவு - செலவு திட்டம் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எங்கள் அமைப்பு பாதீட்டை எதிர்க்கும். அது அனைவருக்கும் தெரிந்த விடயம். புதிய விடயமல்ல. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் மாநகர சபை ஊழலுக்குரிய கோட்டையாக மாறியுள்ளது. அது மிக விரைவில் வெளிவரும்.

ஊழல் செய்து தனிபர் உழைப்பதற்கான ஓர் இடமாக மாறியுள்ளது. இதனை மக்கள் மிக விரைவிலே உணர தொடங்குவார்கள். அந்த கலாசாரத்தை வைத்துக் கொண்டு ஒருநாளும் முடிவுக்கு வர முடியாது. ஒரு கோடி ரூபாயில் அரைவாசியை செலவழித்துக்கொண்டு மிகுதியை தமது பொக்கெற்றுக்குள் போடும் நிலைதான் இருக்கின்றது என்றால் அது ஒருபோதும் மக்களுக்கு சார்பான விடயமாக மாறப் போவதில்லை.

அந்த மாநகர சபை ஊடாக எத்தனையோ விடயங்களை சரிப்படுத்தியிருக்கலாம். இன்று உலக வங்கி கோடி டொலர் கணக்கில் உதவிகளை செய்து வரு கின்ற நிலையில், அந்த உதவிகளை இலங்கை அரசும் ஏனைய தரப்புக்களும் ஊழல் மற்றும் வேறு காரணங்களுக்காகவும் சரியான ஆய்வுகளை செய்யாமல் இருக்கின்றன. இந்த இடத்தில், மாநகர சபை, அதில் உள்ள குறைகளை சுட்டிக் காட்டி நவீன நகரமாக மாற்றியமைப்பதற்கு இந்த நிதிகளை பயன்படுத்துவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடியதாக இருந்திருக்க வேண்டும்.

மாநகர சபை எல்லைக்குள் இருக்கின்ற மத்திய அரசாங்கம் செய்யக்கூடிய வேலைகளைக்கூட சரியான முறையில் நிபுணத்துவம் இன்றி ஆய்வுகள் செய்யாமல் வெறுமனே கண்துடைப்புக்காக செய்ததாக இல்லாமல், உண்மையில் ஆக்கபூர்வமான அபிவிருத்தியாக மாற்றியமைக்கக்கூடிய கண்காணிப்பாக செயல்பட்டிருக்க வேண்டும்.

இன்று மழை வந்தால் கோடிக்கணக்கில் அதனை சீர்செய்வதற்காக நிதியை செலவு செய்கின்றார்கள். ஆனால், வெள்ளம் அப்படியே நிக்கின்றது. ஏனெனில், ஏற்றத்தாழ்வு தொடர்பில் எந்தவித கணிப்பும் இல்லாது, வெறுமனே வீதியில் வாய்க்காலை கட்டியிருக்கின்றார்கள்.

இவ்வாறான மிகமோசமான மோசடிகள் எல்லாமே, மாநகர சபைக்குள் மாத்திரமல்ல, உள்ளூராட்சி சபைகளுக்குள்ளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான விடயங்களில் தேசிய சிந்தனை இல்லாமல், வெறுமனே உழைக்கின்ற சிந்தனையோடு செயல்படுகிறது - என்றார். (ஐ)

## தீவக மின்...

இந்த தகவல்களை நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷங் ஹொங், 'டான்' குழுமத்தினருடனான பிரத்தியேக சந்திப்பின்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று மாலை 'டான்' குழுமத்தினரை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அவர் நீண்ட நேரம் உரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் - தமிழ் மக்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் சீனா அக்கறையோடு உள்ளது. அதேவேளை, வடக்கில் முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதிலும் சீனா ஆர்வமாக உள்ளது. எனினும், சீனாவின் இந்த விருப்பங்களை சில தரப்புக்கள் சந்தேகத்துடன் நோக்குவது எமக்கு கவலை அளிக்கின்றது. சீனாவின் இந்த விருப்பத்திற்குப் பின்னால் எவ்வித இரகசிய நோக்கங்களும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

இதேவேளை, யாழ்ப்பாணத் தீவுகளில் சீன நிறுவனத்தால் தொடங்கப்படவுள்ள உத்தேச மீள்பிறப்பாக்க வலுசக்தி மின் உற்பத்தி திட்டங்களை அந்த நிறுவனங்கள் கைவிட்டுவிட்டன எனவும் அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஆனால், அந்த செய்திகள் இட்டுக்கட்டப்பட்டவை. அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, சீன தூதுவருடன், தூதரகத்தின் அரசியல் விவகார பொறுப்பாளரும் தூதரகப் பேச்சாளருமான லூ ஜ் சூங் மற்றும் பாதுகாப்பு விவகார துணைப் பொறுப்பாளர் கேணல் கஹூபின் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

## வடமராட்சியில்...

நேற்று புதன்கிழமை மாலை அந்தப் பகுதியில் எலும்புகள் சில கரையொதுங்கிய நிலையில் காணப்படுகின்றன என்று வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் அவற்றை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர். இந்த எலும்புகள் தொடர்பில் இன்றைய தினம் சட்ட மருத்துவ அதிகாரி பரிசோதனைகளை நடத்தி தகவல்களை வெளியிடுவார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதியில் அண்மைக்காலமாக மனித சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன. இதுவரை நெடுந்தீவில் ஒரு சடலமும் வடமராட்சி பகுதியில் 6 சடலங்களும் கரையொதுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## 16 பேர்...

ஓர் ஆணும் 2 பெண்களுமாக 3 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10 ஆண்களும், 3 பெண்களுமாக 13 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 677 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## அரசியல் கைதிகளை...

களில் அவர்களின் இனம், மதம், மொழி, அவர்கள் யாரை நேசிக்கின்றார்கள் என்பன உள்ளடங்கலாக அவர்களின் அடையாளத்திற்காக இலக்கு வைக்கப்படுகின்றனர். அத்துடன் அரசியல் கைதிகளில் சிறுபான்மையினரே பெருமளவிற்கு உள்ளடங்குகின்றார்கள். சிறைப்படுத்தப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிளிங்கென் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசியல்கைதிகள் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் இனம், மதம், மொழி, அவர்கள் யாரை நேசிக்கின்றார்கள் என்பன உள்ளடங்கலாக அவர்களின் அடையாளத்திற்காக இலக்கு வைக்கப்படுகின்றார்கள். குறிப்பாக, அரசியல் கைதிகளில் சிறுபான்மையினரே பெருமளவிற்கு உள்ளடங்குகின்றார்கள். சிறை வைக்கப்படும் கைதிகள் சித்திரவதைகளுக்கும் மனிதாபிமானமற்ற முறையிலான நடத்தைகளுக்கும் உள்ளாக்கப்படும் அதேவேளை, அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளும் மறுக்கப்படுகின்றன.

"மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையின் பிரகாரம் சுமார் 65 இற்கும் அதிகமான நாடுகள் அரசியல் கைதிகளை சிறைப்படுத்தியிருக்கின்றன", என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் கைதிகளில் பெருமளவானோர் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் முன்னிறுத்திய அவர்களின் நாடுகளின் சுபீட்சமான எதிர்காலத்துக்கான சிறந்த நம்பிக்கை வித்துக்களாவர். அரசியல் கைதிகளை சிறைப்படுத்துவதானது ஜனநாயகம் மீதான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் சீர்குலைக்கின்றது.

எனவேதான் அரசியல்கைதிகள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் உலக நாடுகள் அனைத்தும் அதற்கு எதிரான நிலைப்பாட்டை வெளியிட வேண்டியதும் அவர்களின் விடுதலைக்காக ஒன்றிணைந்து செயலாற்றுவதும் மிகவும் அவசியமாகும்" என்றும் பிளிங்கென் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## திருமணத்துக்கு...

தப்படும் இடியன் துப்பாக்கியாலேயே அந்தப் பெண் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியா - நெடுங்கேணியில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சத்தியகலா (வயது 31) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டார்.

கொலையாளி என்று சந்தேகிக்கப்படும் நபர் கொல்லப்பட்ட பெண்ணின் அயல்வீட்டில் வசிப்பவராவார். இவர் ஏற்கனவே கொலை குற்றச்சாட்டு ஒன்றுக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவர், கொலையுண்ட யுவதியை தன்னைத் திருமணம் செய்யுமாறு தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளார். இதை யுவதி மறுத்து வந்த நிலையில், குறித்த நபரின் தொந்தரவு தாங்காமல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்நிலையில், நேற்றைய தினம் விவசாய தேவைக்காக பசளை வாங்குவதற்காக தாயருடன் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். வீதியில் வெள்ளம் நின்றமையால் அவரை இறக்கிவிட்டு மோட்டார் சைக்கிளில் வெள்ளம் தேங்கி நின்ற பகுதியை கடந்தபோது, கொலை சந்தேகநபர் இடியன் துப்பாக்கியால் சுட்டதில் யுவதி அந்த இடத்திலேயே பலியானார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மீன்பிடிக்க சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

முல்லைத்தீவு, டிசெ. 16

குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞர் படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார். முல்லைத்தீவு - வவுனிக்குளத்தில் நேற்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அம்பாள்புரம் - ஐந்தாம் கட்டையைச் சேர்ந்த விஜயரட்ணம் நிலவன் (வயது 24) என்பவரே உயிரிழந்தார்.

மீன் பிடிக்கச் சென்றவர் நீண்டநேரமாகக் காணவில்லை என்ற நிலையில், நடத்தப்பட்ட தேடுதலிலேயே இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மாங்குளம் ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## யாழ்ப்பாணத்தின்...

அதனை எவரும் தவறான விதத்தில் விமர்சிக்கக்கூடாது", என்று பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் முன்னெடுக்கும் உடன்படிக்கைகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் அதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார் என்றும் அவர் கூறினார்.

கடந்த இரு ஆண்டுகளில் முப்படையினரின் செயல்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் விதமாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். (ஐ)

## யாழ். வந்த...

படைகளின் கட்டளை தளபதியை சந்தித்துப் பேசினார். பின்னர், தூதுவர் யாழ்ப்பாணம் வந்தார். பருத்தித்துறை முனையை சென்று பார்வையிட்ட அவர் பின்னர் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு சென்றார். அங்கு அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலயத்துக்கு சென்று தரிசித்த அவர், யாழ்ப்பாணத்தில் பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். தூதுவர் இன்றைய தினம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் மீனவர்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கும் அவர் இன்றைய தினமும் பல தரப்பினரை சந்தித்துப் பேசுவார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## யாழ். மாநகர...

கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு ஆதரவாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஓர் உறுப்பினர் என 24 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் என 21 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

இதனால் யாழ். மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 16 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் 13 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 08 - 1952



மறைவு
14 - 12 - 2021

### பேராசிரியர்
### கனகசபாபதி நாகேஸ்வரன்

*(ஓய்வு நிலை பேராசிரியர்- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், மரபுவழி அறங்காவலர்- நயினை ஸ்ரீ நாகபூசணி கோவில், முன்னாள் இலங்கைத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி தயாரிப்பாளர்)*

நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு-06 ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் 14.12.2021 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசபாபதி - கோகிலாம்பாள் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம்- பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிமலர்தேவி அவர்களின் அன்புக் கணவரும்,பிரகாஷ், குருபரன், தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காயத்ரி, தாட்சாயினி, குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜயலட்சுமி, சுந்தரேஸ்வரன், கனகலட்சுமி, மதிவதனி, மேனகா, ரேணுகா, கலைவாணி, நவநீதன் ஆகியோரின் மூத்த சகோதரரும்,காலஞ்சென்ற ராமஜெயம், சாந்தினி, மாசிலாமணி, பாலேந்திரா, அம்பிகைபாகன், ஹரிஹரன், காலஞ்சென்ற வரதராஜா, ஊர்மிளா, விமலாதேவி, ஜெயரட்னராஜா, காலஞ்சென்ற ஜெகநந்தராஜா, புவிமளாதேவி, காலஞ்சென்ற ஜெயபாலராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சேயோன், திவ்வியன், ஓவியன், ஓவியா, இனியா ஆகியோரின் ஆசை அப்பப்பாவும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் 16.12.2021 வியாழக்கிழமை அன்று மு.ப 09:00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 04:30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பிரகாஷ் (மகன்)** :
+94774742106

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**





# யாழ். நூலகத்தை பார்வையிட்ட சீனத் தூதுவர்

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தை நேற்று பார்வையிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத் துக்கு வந்தார்.

சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினரை யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ. ஜெயசீலன்



உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

பின்னர் சீனத் தூதுவர் நூலகத்துக்கு ஐந்து மடிக் கணனிகளையும் சில புத்தகங்களையும் வழங்கி வைத்ததோடு நூலகத்தையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)

# 44 நாட்களில் எரிவாயுவுடன் தொடர்புடைய 727 விபத்துகள்

## *24 மணிநேரத்தில் 24 சம்பவங்கள்*




*கொழும்பு, டிசெ. 16*

இலங்கையில் கடந்த 44 நாட்களில் எரிவாயு வெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய 727 விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விபத்துகள் தொடர்பாக ஊடகங்களுக்குப் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நேற்று அதிகாலை வரையான 44 நாட்களில் 727 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

24 மணித்தியாலங்களில் எரிவாயுவுடன் தொடர்புடைய 24 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ)

# சுகாதார பணியாளர்கள் போராட்டம்

*பதுளை, டிசெ. 16*

பதுளை மாவட்ட சுகாதார பணியாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார மருத்துவ ஆய்வுகூட வல்லுநர்கள், செவிலியர்களின் நிறைவுகாண் சுகாதார வல்லுநர்கள் மற்றும் சுகாதார துணை வல்லுநர்கள் இணைந்தே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார நிபுணர்களின் சம்பள முரண்பாடு, பட்டதாரிகளின் சம்பளம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுதல் உட்பட ஏழு கோரிக்கைகள் போராட்டத்தின்போது முன்வைக்கப்பட்டன.

பதுளை வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமான பேரணி, ஊவா மாகாண சபை வரை சென்றது. அங்கு வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ)












*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ -மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
சாட்டை,சுந்தரபாண்டியன்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்